PUBLIC LIBRARY
JAFFNA

PL

விலை ரூபா 15.00

REGISTERED AS A CATHOLIC WEEKLY (G.P.O.197) FOUNDED 19 FEB 1876

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

பாதுகாவலன்

19-07-2009 PAATHUKAVALAN

மலர்: 133 இதழ்: 13 பக்கங்கள்: 08 St. Joseph's Catholic Press, 360 Main Street, P.O. Box. 2, Jaffna, Sri Lanka. Tel 021-222 2378, Fax 021 2229041, ISSN 1391 - 7633

கிறிஸ்து என்னும் உண்மையை அன்பிலே வெளிப்படுத்துவோம்

'உண்மையில் அன்பு' (Caritas in Veritate)

திருத்தந்தையின் மூன்றாவது திருமுகம் வெளிவந்துள்ளது

திருத்தந்தை 16ம் பெனடிக்ற் 'உண்மையில் அன்பு' என்ற தலைப்பில் திருமுகம் ஒன்றை எழுதி வெளியிட்டுள்ளார். கடந்த மாதம் 29ம் திகதி புனிதர்கள் பேதுரு பாவிலு திருநாளன்று வத்திக்கானில் வெளியிடப்பட்ட இத்திருமுகம் திருத்தந்தை அவர்கள் தனது பணிவாழ்வில் எழுதி வெளியிட்டுள்ள மூன்றாவது திருமுகம் ஆகும். ஏற்கனவே திருத்தந்தை அவர்கள் 'அன்பே இறைவன்' (Deus Caritas Est), கிறிஸ்தவ நம்பிக்கை (Spe Salvi) ஆகிய தலைப்புக்களில் இரண்டு திருமுகங்களை எழுதி வெளியிட்டது நாம் அறிந்ததே.

'உண்மையில் அன்பு' என்ற தலைப்பில் தற்போது வெளியிடப்பட்டுள்ள திருமுகமானது உண்மையையும் அன்பையும் உறுதிப்படுத்தும் சமூகக் கோட்பாடுகளைக் கொண்டதாகும். கிறிஸ்து என்னும் உண்மையை அன்பிலே வெளிப்படுத்துவதன் வழியாக நாம் எமது தனிப்பட்ட வாழ்வையும் சமூக வாழ்வையும் புதுப்பிக்கமுடியும் என்பதை இத்திருமுகம் எடுத்தியம்புகிறது என்று இதனை வெளியிட்டுவைத்த திருத்தந்தை அவர்கள் தனது அறிமுக உரையின்போது தெரிவித்தார். புனித பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்தில் குறிப்பிடுகின்ற உண்மை, அன்பு, நீதி பற்றிய பகுதிகளை அடிப்படையாகக் கொண்டே இத்திருமுகம் எழுதப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

சமூகப் பிரச்சனைகளுக்கான தீர்வை முன்வைப்பதைவிட, மனிதனுடைய முன்னேற்றத்துக்கான மிகஅவசியமான வழிமுறைகளைக் கற்பிப்பதிலேயே இத்திருமுகம் கவனம் செலுத்துகின்றது என்று குறிப்பிட்ட திருத்தந்தை, மனித முன்னேற்றத்துக்காக தொழில் நுட்பத்தில் அதீத நம்பிக்கை கொண்டிருப்பதையும் இத்திருமுகம் எச்சரிக்கின்றது என்றும் குறிப்பிட்டார்.

பட்டினியை எதிர்கொள்ளும் உலகு காப்பாற்றப்படவும், விவசாய அபிவிருத்திக்கு முன்னுரிமை கொடுக்கவும், சுற்றுச்சூழலின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவும் வேண்டிய அவசியம் பற்றியும் இத்திருமுகம் விளக்குவதாகவும் திருத்தந்தை தெரிவித்தார்.

மொத்தத்தில் திருத்தந்தையினுடைய 'உண்மையில் அன்பு' என்ற திருமுகம் இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு மனிதருக்கும் சிறந்த எதிர்காலம் உண்டு என்ற சாத்திய நிலையை சுட்டிக் காட்டி நிற்கிறது எனலாம்.

வெள்ளி விழாக் காணும் எமது யாழ். மறைமாவட்டக் குருக்கள்

அருட்பணி. ஆர்.சி.எக்ஸ் நேசராஜா

அருட்பணி. எக்ஸ். பேர்னாட் றெக்னோ

அருட்பணி. ஏ. சகாயதாசன்

எமது யாழ் மறைமாட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தையர்கள் ஆர்.சி.எக்ஸ் நேசராஜா, எக்ஸ். பேர்ணாட் றெக்னோ, ஏ. சகாயதாசன் ஆகிய குருக்கள் வருகிற ஆகஸ்ட் மாதம் 4ம் திகதி தமது குருத்துவ வெள்ளிவிழாவை நிறைவுசெய்கிறார்கள் என்பதை பாதுகாவலன் தனது வாசகர்களுக்குத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றான். இவர்களை அன்போடு வாழ்த்துகிறோம். அடுத்த பாதுகாவலன் இவ் யூபிலி நாயகர்கள் பற்றிய சிறப்புக் கட்டுரைகளைத் தாங்கிவரும்.

கவிஞர் செஸ்ரெற்றனை புனிதராக்க முயற்சி

பழம்பெரும் கவிஞரும் எழுத்தாளருமாகிய ஜி. கே. செஸ்ரெற்றன் (Gilbert Keith Chesterton) என்பவரை புனிதராக்குவதற்கான ஆரம்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக வத்திக்கான் செய்திகள் தெரிவிக்கின்றன. 1874-1936 காலப்பகுதியில் வாழ்ந்த இவரை புனிதர் நிலைக்கு உயர்த்துவதற்கான வழிமுறைகளை ஆரம்பிப்பதென லண்டனிலுள்ள செஸ்ரெற்றன் சமூகம் பரிந்துரை செய்துள்ளது. இவருடைய வாழ்வும் எழுத்துக்களும் வெளிப்படுத்திய தூய்மையை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்பட்ட 'செஸ்ரெற்றனின் புனிதத்துவம்' என்ற தலைப்பிலான அனைத்துலக மாநாட்டின் முடிவிலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. தவறான பாதையில் சென்றுகொண்டிருந்த உலகின் போக்கை தனது வாழ்வினாலும் எழுத்துக்களினாலும் மாற்றி சரியான வழிக்கு கொண்டுவந்தவர் என்ற பெருமைக்குரியவராக கவிஞர் செஸ்ரெற்றன் விளங்குகிறார்.

யாழ் மறைமாவட்டத்தில் கொழும்பு இறைதியானக் குழுவினர்

கொழும்பு உயிர்த்த ஆண்டவர் இறைதியான குழுவினர் சகோதரன் லலித் பெரேரா தலைமையில் இறைதியான குணமாக்கல் வழிபாடுகளை எமது யாழ் மறைமாவட்டத்தில் நடாத்தி வருகிறார்கள்.

இம்மாதம் 18ம், 19ம், 20ம் திகதிகளில் இவர்களுடைய வழிபாடுகள் இறைதியான இல்லத்திலும், பண்டத்தரிப்பிலும் நடைபெறுகின்றன.

குருக்கள், துறவிகள், அருட்சகோதரிகளுக்கான வழிபாடு திங்கட்கிழமை நடைபெறுகிறது.

ஏன் இந்த குருக்கள் ஆண்டு?

மானிட வாழ்வின் மிக உன்னதமான கொடையாகிய குருத்துவம் இன்று பாரிய பிரச்சனைகளை எதிர்கொண்டுள்ளதே குருக்கள் ஆண்டு பிரகடனத்துக்கான காரணம் என வத்திக்கான் ஊடக அலுவலக இயக்குனராகிய இயேசு சபையைச்சேர்ந்த அருட்தந்தை பெடறிக்கோ லொம்பார்டி தெரிவித்தார். திருச்சபையினுடைய வாழ்வின் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த குருத்துவம் பல சாவால்களை எதிர்கொள்வது அசட்டை செய்யப்பட முடியாதது என்று தெரிவித்த அவர், கடந்தகாலங்களில் சிலருடைய அசமந்தப்போக்கினால் களங்கப்படுத்தப்பட்டுள்ள குருத்துவம் அதன் உன்னத நிலையை மீண்டும் அடைய இக் குருக்கள் ஆண்டு துணை செய்யும் என்றும் தெரிவித்தார்.

எமது வாழ்வின் வளமைக்குக் காரணம் குருக்களே!

வத்திக்கானில் கடந்த திருஇருதய ஆண்டவர் திருநாளின் போது திருத்தந்தை குருக்கள் ஆண்டை ஆரம்பித்து வைத்தபோது பல்லாயிரக்கணக்கான இறைமக்கள் அதில் கலந்து கொண்டார்கள். அவர்கள் சார்பில் கருத்துத் தெரிவித்த ஆர்ஜென்டினா நாட்டைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான திரு. யோண் கபலேரோ என்பவர், தாம் இவ்வைபவத்தில் கலந்துகொள்வது பெரும் பாக்கியமான நிகழ்வு என்றும், மறுகிறிஸ்துக்களாக பணிபுரியும் குருக்கள்தான் தமது இன்றைய வளமான வாழ்வுக்குக் காரணம் என்றும் தெரிவித்தார். மந்தைகளாகிய எமக்காக தமது வாழ்வையே அர்ப்பணித்துப் பணியாற்றும் நல்லாயர்களாகிய குருக்களுக்காக இவ்வாண்டில் நாம் நிறையவே செபிப்போம் என்றும் அவர் கூறினார்.

ஸ்பெயின் நாட்டுக் குருவானவர் கியூபாவில் கொலை

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த 74 வயதுடைய அருட்தந்தை மேரியானோ அரோயோ மெரீனோ என்ற கத்தோலிக்க குருவானவர் தனது பங்கு மனையில் கத்தியால் குத்தப்பட்டு இறந்துகிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டார். இவருடைய கொலைக்கான காரணம் இதுவரை அறியப்படவில்லை. கடந்த 40 ஆண்டுகளாக இவர் கடல் கடந்த மறை அறிவிப்பாளராக சிலி, கியூபா ஆகிய நாடுகளில் அரும்பணியாற்றியுள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதத்திலும் கியூபாவில் மறைப்பணி புரிந்த 59 வயதான அருட்தந்தை செரானோ என்பவரும் கொலைசெய்யப்பட்டார். இவரும் ஸ்பெயின் நாட்டையே சேர்ந்தவராவார்.

பாதுகாவலன் எமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில் காவலர்கள் விழித்திருப்பது வீணாகும்

சரியான பாதை எது...

பத்திரிகைகளில் இன்று அடிக்கடி பார்க்கக் கூடிய தலைப்புக்களில் பாடசாலைகளின் சாதனைகள், விளையாட்டுத்துறையின் அபாரமான வெற்றிகள், பரிசளிப்பு விழாக்கள், ஆங்கில, தமிழ் மன்ற விழாக்கள் போன்றன பத்திரிகைகளில் முதலிட செய்திகளாக இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. மறுபக்கத்தில் ஆரம்பப்பிரிவு மாணவர்களிற்கான அறு மதிப்பீட்சை, ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை தித்திக்கும் சாதனைகளும் சாதாரண தரப்பரீட்சைப் பெறுபேறுகளும் உயர்தரப் பரீட்சையின் சாதனைகளும் மாணவர் பக்கத்தில் மண்ணிற்கும் பெருமையும், கண்ணிற்கு குளிர்மையும் அளிக்கின்றன.

இந்த வகையில் இப்போது எமது மாணவ சமுதாயம் எதிர் நோக்கியிருக்கும் பெரும் சாதனைக்கான தடைக் கோடு, அடுத்த படிக்கட்டு, கா.பொ.த உயர் தரப்பரீட்சை. இதை எம் மாணவர் தாண்டியே ஆகவேண்டிய கோடு ஏறியே ஆக வேண்டிய படிக்கட்டு. மற்றெல்லாவற்றிற்கும் மேலாக கல்வியானது மனித சமுதாயத்தை நிகழ்காலத்திற் சரியான பாதையில் வழிநடத்தி வளமுள்ள எதிர்காலத்திற்கு இட்டுச் செல்கிறது என்பது உலகம் கண்ட முடிவு. படிப்பதும், பரீட்சை எழுதிப் பட்டம் பெறுவதும், உயர் பதவிகளைப் பெற்றுக் கொள்ளுவதும் அவரவர் தனிப்பட்ட உழைப்பின் வழியே உருவாகும் பரீட்சைப் பெறுபேறுகளிலே முழுமையாக தங்கிஉள்ளது.

அன்பான மாணவச் செல்வங்களே!

இந்த ஆண்டு [2009] உயர்தரப் பரீட்சைக்காய் உச்ச அளவில் ஆயத்தங்களை மேற்கொண்டிருக்கும் என் **அன்பு மாணவச் செல்வங்களே!** நீண்ட கல்வி ஆண்டைக் கடந்து மிக அண்மைக் காலங்களில் உங்கள் கால்கள் பதிக்கப்படுவதை உணர்கிறீர்களா? அல்லது "சீ... அட... சீ... இவ்வளவு காலத்தை விரயமாக்கிவிட்டேனே இனி எப்படி இவ்வளவு பாடத்தையும் கற்கப் போகிறேன்?" என நெஞ்சு பதறுகிறதா? கொஞ்சம் பொறுங்கள். நெஞ்சுரம் கொட்டி உலக சாதனையாளர்கள் பலரை சரித்திர நாயகர்களாக்கிய சக்தி மிக மந்திரங்களால் சிலவற்றை ஆனால் சிகரம் போன்ற பாடசாலையில் கல்வி கற்பது பதவிகளையும் பட்டங்களையும் பெற்றுக் கொள்வதையே நோக்கமாக இருப்பதைத் தவிர்த்து விட்டு நல்லொழுக்கங்களையும், நல் எண்ணங்களையும் எம்முள்ளே வளரச் செய்து நான் யார்? என்னுடைய பெற்றோர் யார்? என் பிறப்பின் நோக்கமென்ன? நான் எங்கே செல்லுகிறேன்? என்ற வார்த்தை உளிகளால் எங்களை நாமே செம்மையாக்கி, செதுக்கி மனிதமுள்ள மனிதர்களாக, மாண்புள்ள மனிதர்களாக நாளைய சமுதாயத்தின் பயனுள்ள கருவிகளாகப் பிரகாசிப்போம்.

இத்தருணத்தில் பாடசாலைச் சமூகமும், பெற்றோரும், அயல் சமூகமும் எமது மாணவர்கள் தங்களது சிந்தனைகளை ஒருமுகப்படுத்த தகுந்த ஆயத்தங்களைச் செய்ய தெளிந்த மன நிலையை பொருத்தமான சூழலை உருவாக்கிக் கொடுப்பது இன்று கட்டாயமான தேவையாகும். மாணவர்களின் எதிர்கால வாழ்க்கை ஆன்மீக நலன் முதலியன கவனிக்கப்பட்டு சமய அனுட்டான பழக்க வழக்கங்களும் மாணவர்களது வாழ்க்கையிற் பிரதிபலிக்கத் தக்கதாக ஆசிரியரும், அதிபர்கள், பெற்றோர்கள் அனைவரும் உதவியாக இருக்க வேண்டும். வாழ்க்கைக்கு உகந்த கல்வியே மாணவர்களது மூலந்தி என்பது அழியாத உண்மை.

அருட்பணி. சாள்ஸ் கொலின்ஸ்

"மாணவர்கள் ஆற்றும் நற்கருமங்கள் அனைத்தும் பாடசாலையின் வளர்ச்சிக்குப் பயன்தரவேண்டும்"

புனித கென்றியரசர் கல்லூரி அதிபர்

மாணவர் மையப்படுத்தப்பட்ட இக்கால கல்விச் சூழலில் அவர்களால் ஆற்றப்படும் எந்தச் சிறிய நற்கருமங்களும், அவர்கள் கற்கும் கல்லூரிக்கும், அதன் வழியாகச் சமூகத்திற்கும் பயனளிப்பதாக அமைய வேண்டும். தற்காலத்தில் பல்வேறுபட்ட வளவசதிகள் இருப்பினும், மாணவர்கள் மத்தியில் சுயநலமான மனப்பாங்குகளும் மனித மாண்பை வளர்க்காத நிலைகளுமே அதிகரித்துக் காணப்படுகின்றன. பாடசாலை நீதியான போது விடயங்களை மேற்கொள்வதாயினும், விழாக்களை முன்னெடுப்பதாயினும் மாணவர்கள் தாமாகவே முன்வந்து அர்ப்பணிப்போடு செயற்படுவதே இன்றைய தேவையாக விளங்குகின்றது. இவ்வாறான மனநிலைகளைக் கட்டியெழுப்புவதற்காகவே பாடசாலையில் பல விழாக்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அவை மாணவர்களின் மனநிலையில் ஆக்கபூர்வமான மாற்றத்தையும், வளர்ச்சியையும் தூண்டுபவையாக விளங்க வேண்டும்.

மேலும் தற்கால அமைதியற்ற சூழலில் இவ்வாறான விழாக்கள் மேற்கொள்ளப்படுவது அவசியம் தானோ? என பலரும் கேள்வி எழுப்பலாம். ஆனால் விழாக்கள் எடுப்பது அற்ப மகிழ்ச்சியை ஆடம்பரத்தினை ஏற்படுத்துவதாக அமையாது, மாணவரிடையே உளமாற்றத்தையும், பொறுப்புணர்வையும் ஏற்படுத்துவதாக அமைவதுடன் பாடசாலையின் நற்பெயரைப் பேணுவதாகவும் விளங்கவேண்டும். அவ்வேளைகளில் தான் நெருக்கடிகள் பலவற்றிலும் நாம் விழாக்களை முன்னெடுத்தாலும் அவை அர்த்தம் பெறுபவையாகத் துலங்கும்.

இவ்வாறு யா/ இளவாலை கன்னியர் மடம் ம.வி. இன் பாடசாலைத் தினத்தில் பங்கேற்று திருப்பலி நிறைவேற்றிய யா/ இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்பணி. யேசுதாசன் அவர்கள் தமது மறையுரையில் குறிப்பிட்டார். விழா ஒழுங்கமைப்புக்கள் அனைத்தும் பாடசாலை அதிபர் அருட்சகோதரி தயாநாயகி செபமாலை அவர்களின் தலைமையில் சிறப்புற இடம் பெற்றன.

S.M. அனோறன்ஸ்

வள(னா)ர் பப்பா பதில்கள்

1. கேள்வி:- அன்புள்ள வளனாரே, திருவிழாக்களின்போது நீண்ட மறையுரைகளா சுருக்கமான மறையுரைகளா நல்லவை?

ராஜதிலகேஸ்வரி, சண்டிக்குளி

பதில் :- இது மறையுரை கேட்போரின் மனநிலையைப் பொறுத்தது. என்வாழ்வில் மாற்றம் வேண்டுமென்ற தேவையுடன் கேட்போருக்கு மேற்சொன்ன எந்த மறையுரையும் நல்லவையே. அந்த தேவை இல்லாதவரிடமிருந்தே மறையுரை சரியில்லை என்ற விமர்சனம் பொதுவாக எழுவதுண்டு. மலையிலிருந்து சறுக்கி விழுகிறவனுக்கு ஒரு வேர் போதுமே பற்றிக்கொள்ள.

2. கேள்வி:- அன்புள்ள வளனார் பப்பா, கிறிஸ்தவ திருமணத்தின் பிரதான நோக்கங்கள் எவை?

ஆரோக்கிய மேரி. சுன்னாகம்.

பதில் :- அன்பு செய்வதும் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்வதுமாகும். ஆனால் சில குடும்பங்களில் இலக்கு, சண்டை செய்வதும் சீதனங்களைப் பெற்றுக் கொள்வதுமாக இருப்பதால் தான், குடும்பங்கள் சீரழிந்து போகின்றன.

3. கேள்வி:- வளனாரே! எம்மாவு சீடர்களின் வாழ்வில் இயேசு அப்ப வடிவில் வந்ததை உணர்ந்திருக்கும் வேளையில் இன்னும் மக்கள் சுருபங்களில் இயேசுவைக் காண விளைவது ஏன்?

பதில் :- திருச்சுருபங்கள் கட்புலனுக்கு உட்பட்டவை என்பதால் அவை இலகுவில் மக்களைக் கவர்ந்து கொள்கின்றன. இறையுணர்வைத்தூண்டும் ஆரம்ப நிலைகளாக அவற்றைக் கொள்ளலாம். ஆனால் நற்கருணை வாழ்வு என்பது ஓர் அனுபவம். நற்கருணையில் தான் கிறிஸ்தவ வாழ்வு மையம் கொண்டுள்ளது. சில வேளைகளில் நற்கருணையை சுருபமாகப் பார்த்து வழிபட்டு, அன்பு வாழ்வைப் புறக்கணிக்கும் அபாயமும் உள்ளது. நற்கருணையை வாழ்வோடு தொடர்புபடுத்துங்கள்.

4. கேள்வி:- வளனாரே, ஆதிக்கிறிஸ்தவர்கள் ஒன்றாய் இருந்தார்கள் இன்று ஆலயங்களும் அவற்றின் அமைப்புக்களும் மக்களின் வாழ்வும் வேறுபட்டிருப்பது ஏன்?

பதில் :- அன்றைய ஆதிக் கிறிஸ்தவர்கள் இன்று ஆதிவாசிகள் போலாகி விலங்குகளைப்போல சக மனிதர்களை வேட்டையாடுகின்றார்கள் போலும். ஒன்றாய் செபிப்பதும் நட்புடன் உறவாடுவதும், பகிர்வதுமே அவர்களின் ஒற்றுமையின் இரகசியம். இன்று அன்பியங்கள் மூலம் திருச்சபை அவ் இலட்சியக் குழுமத்தை உருவாக்க முனைகிறது. ஆனால் சாதியமும், சுயநலமும் இதற்குப் பெருந் தடையாக நிற்பது வருத்தத்துக்குரியது.

5. கேள்வி:- வளனாரே! கத்தோலிக்க திருச்சபையில் நடைபெறும் சடங்குகளான கொடியேற்றம் (ஆலயத்திருவிழா) கூடுகற்றுதல், பவனி செல்லுதல் போன்றவை கிறீஸ்தவ இந்து கலாச்சாரத்தை அடிப்படையாக கொண்டு காணப்படுகிறதே, காரணம் யாது?

எஸ். லோகனி. நெடுந்தீவு

பதில் :- கொடியேற்றம், கூடுகற்றல் போன்ற இந்து தமிழ் கலாச்சார படிமங்கள் மட்டுமல்ல, கிறிஸ்தவம் தன்னை நிலை நிறுத்தி கொள்ள - தமது இலக்கை அடைந்து கொள்ள வெவ்வேறு பண்பாடு - நாகரீக - பழக்க வழக்கங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கி வருகிறது. அவ்வகையில் எம் பிரதேசத்தில் பெரும்பான்மையாகவுள்ள இந்து தமிழ் பண்பாட்டை கிறிஸ்தவம் தழுவுவதில் ஆச்சரியமில்லையே

6. கேள்வி:- அன்புள்ள வளனாரே ! தூய பவுல் ஆண்டின் முக்கியத்துவத்தை நாம் எப்படி நடைமுறைப்படுத்தலாம்?

பதில் :- பவுலின் திருமுகங்களை பாடசாலைமட்டத்திலும் பங்கு மறைக்கல்விகளிலும் பக்திச் சபைகள் மட்டத்திலும் அறிமுகம் செய்வதன் மூலம் நடைமுறைப்படுத்தலாம். இன்னும் சிறப்பாக ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் பவுலின் திருமுகங்களை வாசித்து ஒரு பரிட்சையத்தை ஏற்படுத்துவதன் மூலம்

(தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க...)

திருச்சபை என்னும் உறவுப் பாலத்தில் ஒளித் தூண்கள் குருக்களே!

அருட் சகோ. ரமேஸ் அ.ம.தி

கடவுள் தாம் படைத்த அனைவரையும், அனைத்தையும் பாதுகாத்து, பராமரித்து, வருகிறார். அந்த பணியை தம்மோடு இணைந்து செயலாற்ற தமது சாயலாகவே படைக்கப்பட்ட படைப்பின் சிகரமான மனிதனை அழைத்து நிற்கிறார். பல்வேறு பணிகளைச் செய்வதற்கு ஒவ்வொரு மனிதனுக்கும் இறைவனுடைய அழைப்பு மனிதர்கள் வழியாகவோ, இயற்கையின் வழியாகவோ வரலாம். யார் வழியாக வந்தாலும் அழைப்பவர் இறைவனே என்ற உயரிய நம்பிக்கையோடும், ஆழமான விசுவாசத்தோடும் இறைவனுக்கும், திருச்சபைக்கும், மக்களுக்கும், உலகிற்கும் கிறிஸ்துவின் பெயரால் பணியாற்றுபவர்களே குருக்கள்.

மக்களுக்கும் இறைவனுக்கும் இடைநிலையாளராக ஏற்படுத்தப்பட்டவர்களே குருக்கள் என விவிலியம் எடுத்துரைக்கிறது. பழைய ஏற்பாட்டில் மக்கள் சார்பாக இறைவனுக்கு பலி ஒப்புக்கொடுப்பதும், மக்களின் தேவைகளில் அவர்களுக்காக இறைவனிடம் பரிந்துரைத்து செபிப்பதும் அவர்களது பணியாக இருந்தது (இ.ச 33:9-10). இறைவன் முன் மக்கள் பிரதிநிதியாக இருப்பது குருக்களின் உயர்ந்த நிலையாகக் கருதப்பட்டது (வி.ப 28:1). இறைவனின் சித்தத்தை எடுத்துக்கூறும் இறைவாக்கு அல்லது போதிக்கும் பணியிலும் இவர்கள் ஈடுபட்டிருந்தனர். புதிய ஏற்பாட்டில் குருத்துவத்திற்கு முற்றிலும் புதிய பொருளைத் தந்தார் இறைமகன் இயேசு. புதிய உடன்படிக்கையின் இடைநிலையாளராகிய கிறிஸ்து தாமே பலியிடுபவராகவும் பலிப் பொருளாகவும் திகழ்ந்து குருத்துவத்திற்கு புதுப்பொருள் புகட்டினார் (எபி 9:15, 1கொரி11:25). அவரே இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள ஒரே குரு, ஒரே மீட்பர், ஒரே இடைநிலையாளர். தமது சிலுவைப் பலியால் கிறிஸ்து இறைவனின் தலைமைக் குருவாகவும், தம் சகோதரர்களுள் ஒருவராகவும் திகழ்ந்தார் (எபி 2:11, கலா3:13). கிறிஸ்து தம் சகோதரரோடு கொண்டிருந்த நட்புறவால் அவரது குருத்துவத்தில் பிறரும் பங்குபெறும் வாய்ப்புத் தோன்றியது.

கிறிஸ்துவின் அடிச் சுவட்டைப் பின்பற்றி தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட இறைமக்களுக்காக அல்லும் பகலும் பணிபுரிந்து அவர்களுக்காக தங்கள் வாழ்வு முழுவதனையும் அர்ப்பணித்து இயேசுவின் உண்மைக் குருத்துவத்தில் பங்கெடுப்பவர்களே குருக்கள். இறைவனின் திருவுளத்தை நிறைவேற்ற வேண்டுமென்றால் துன்பங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். சிலுவையின்றி மீட்பு இல்லை என்று துன்பங்களை மனமுவந்து ஏற்றுக் கொண்டு சோதனையின் போதும் துவண்டு விடாது, வேதனைகளை விருப்போடு தாங்கி தனக்காகவும் உலகிற்காகவும் இறைவேண்டல் செய்பவர்களே குருக்கள் ஆவர்.

இயேசுவின் பணியைப் பின்பற்றி அவரது மறையுடலாக, உறவுப்பாலமாக காட்சி தரும் திருச்சபையில் ஒளித்தூண்கள் குருக்களே. தமக்காக வாழாமல் மக்களின் நலனுக்காகவும் திருச்சபையின் பொதுநன்மைக்காகவும் வாழ்ந்து இவ்வுலகில் கிறிஸ்துவை

(தொடர்ச்சி 5ம் பக்கம் பார்க்க...)

பிரிவின் வலி

எங்கள் அருமை உறவுகளே
எங்களை விட்டுப்பிரிந்தீர்கள் - நீங்கள்
உங்கள் நினைவால் நாங்கள் - நிதம்
உதிரம் பொங்க அழுகின்றோம்
யுத்தம் எனும் கோரத்தால்
கொடியவர்கள் உங்களைக் கவர்ந்தனரே
கொன்றவர்கள் மகிழ்வுடன் வாழ
எங்கள் மனங்கள் கொந்தளிக்குது

துள்ளி விளையாடும் இளமைப் பருவத்தில்
எம் உறவுகளை காற்று கிள்ளி விட்டதே
குயிலோசை கேட்கும் காதில்
குண்டோசை கேட்டீர்களோ
கவியோசை கேட்கும் காதில்
கண்ணி வெடியோசை கேட்டீர்களோ
சோலைகளைத் தேடி நாடிய போது
பாலைகளே உங்களுக்குப் பரிசாகக் கிடைத்தது
அப்போது வரவழிந்து போனது பூமி
மட்டுமல்ல நம் குடும்பமும் தான்.

அ. மேரி அன்ரனியா (தர்சினி),
நாவாந்துறை வடக்கு

ஜனநாயகத் தேரில்

சர்வதிகார மன்னர்களின் பவனி
தேரின் சில்லுக்குள் - மக்கள்
சிறுதுகள் சிக்குண்டதனால்
குருதியானோரா

தவிப்பு

தொண்டர் நிறுவனங்களில்
சுவாசிப்புடன் மீண்டும்
வருபவரை என் குடிசையின்
சக்குவே கொஞ்சம் பொறுங்கள்
அடுத்த வாசுக என கூறி போகவில்லை

நிஜத் தேடல்

மனிதனே மரமாகு
உடல் ஞானியானாத் தேடு
மறுபிறவி மகத்துவம்
செய்வோம்

ச. அகில்குமார்,
[illegible]

கவிதைச் சரம்

சுதந்திர அதிகாலை

யாழ்நாட்டு உலகினிலே - மாவிட்டபுரம்
நாம் பிறந்தோம் - சுதந்திரம்
மலராதா என கண்களை திறந்திருந்தோம்
அதிகாலை பொழுதினிலே எம் கனவை நாம் இழந்தோம்

எம் முதாதையர் செய்த பாவம் தானோ - விதி
இழுக்கிட்டு விளையாடுகிறது - எம்
தலைவிதியை மாற்ற முடியுமா - இறைவன்
அருளாலேயே முடியும்.

பஞ்சம் பறக்காதோ - எம் தேசத்தில்
துன்பம் இனி இருக்காதோ - எம் உள்ளத்தில்
சண்டை சச்சரவு முடங்கிக் கிடக்குமோ - எம் அரங்கில்
சுதந்திரம் இனி மலருமோ - எம் நாட்டில்

இறை நம்பிக்கையாலேயே எம் வாழ்வு முழுமையடையும்
போர் என்னும் தீய சொல் எம்மிடத்தில் அகன்று போகும்
எங்கள் கனவுகள் நிஜமாகும்
எம் சமூகத்தில் எம் நாட்டில் எம் உலகில் சுதந்திரம் மலரட்டும்

அ. கனிஸ்ரன், ஆனைக்கோட்டை

வேகம்

குருதியின் ஓட்டம்
குறைவின்றி ஓடியதால்
பேனாவின் கூர்முனைகள்
காயங்களின் எல்லைகளை
கண்ணீராய் காட்டியது

உள்ளக் குமுறல்கள்
உருக்குலைந்து போனதால்
எண்ணத்திரைகள் ஈடேற மறுத்தது
கள்ளம் அற்ற வெள்ளை உள்ளம்
காய்ந்திருகிப்போனதால்
கடல்பரப்பு கல் உப்பாய் ஆனது
நினைவாற்றல் இழந்த நெஞ்சங்கள்
விழிதூங்க மறுத்ததால்

பார்வையின் வீரம்
பதுங்கிப் பாய்ந்தது
பாவம் என்று பாம்பை கருதியதால்
கொத்திய விஷம் உடலெங்கும்
ஊடுருவிப் பாய்ந்தது

உயிரோவியங்கள்
உயிருடன் சிதைக்கப்பட்டதால்
வரை படங்கள் வன்முறையைத்
தூண்டி எழுப்பின
காலம் காலமாய் காத்திருந்த
நினைவலைகள்
காற்றுடனும் நீருடனும்
வேகமாய் கலந்து மறைந்ததே

ம. ஜெயராட், நெடுந்தீவு.

வாழ்க்கைப் பதிவேடு!

பிறப்புச் சான்றிதழில்..
பள்ளிக்கூட ஆவணத்தில்..
அடையாள அட்டையில்..
வங்கிப் புத்தகத்தில்..
பூப்புனித நீராட்டு அழைப்பிதழில்..
பாஸ்போட்டில்..
காணி உறுதியில்..
மின்வரி பில்லில்..
கல்யாணப் பதிவேட்டில்..
நிவாரணக்கடை [illegible]..
சொத்துப் பத்திரத்தில்
குடியிருப்புப் பட்டியலில்..
வீட்டு விலாசத்தில்..
வாக்காளர் டாப்பில்..
கடித உறைகளில்..
என் கை எழுத்தில் - எல்லாத்திலுமே
என் பெயருக்கு முன்னால்
என் தந்தையின் பெயரையே..
பதிவு செய்து கொள்கிறேன்!
கூடவே.. என்
இறப்புச் சான்றிதழிலும்...

வி. முகிலன், நெடுந்தீவு - 13

வாரும் வாரும் அமைதியின் தேவனே

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
வாராயோ தேவனே [illegible] வாராயோ

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
வாராயோ தேவனே எமைக்காக்க வாராயோ

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
வாராயோ தேவனே எமைத்தேற்ற வாராயோ

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
வாராயோ தேவனே துயர் துடைக்க வாராயோ

வாரும் வாரும் அமைதியின் தேவனே
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

உனக்கு இப்படியும் ஒரு கடிதம்

அருட்பணி. மா. ரேஜிஸ் இராசநாயகம்

அன்பு மகனே/ மகளே!

நீ என்னை அறியாமல் இருக்கக்கூடும்; ஆனால், நான் உன்னைப்பற்றி அனைத்தும் அறிவேன் (தி.பா. 139:1). நீ அமர்வதையும் எழுவதையும் நான் அறிந்திருக்கிறேன் (தி.பா. 139:2). உன் வழிகள் எல்லாம் எனக்குத் தெரிந்தவையே (தி.பா.139:3). உன் தலை முடியெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது (மத். 10:29-31). நீ என் உருவிலே படைக்கப்பட்டிருக்கிறாய் (தொ.நூ. 1:27). என்னில்தான் நீ வாழ்கின்றாய், இயங்குகின்றாய், இருக்கின்றாய் (திப. 17:28). நீ என் பிள்ளை (திப. 17:28). தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கு முன்பே அறிந்திருந்தேன். (எரே. 1:4-5). எனது திருவுளத் திட்டத்தின்படி நீ முன் குறிக்கப்பட்டாய் (எபே. 1:11-12). நீ பிறந்தது ஒரு தவறல்ல. உன்னுடைய நாட்கள் எல்லாம் எனது நூலில் எழுதப்பட்டுள்ளன (தி.பா. 139:15-16). உனக்குக் குறிப்பிட்ட காலங்களையும் குடியிருக்கும் எல்லைகளையும் வரையறுத்துக் கொடுத்தேன் (தி.ப.17:26). அஞ்சத்தக்க, வியத்தகு முறையில் நான் உன்னைப் படைத்தேன் (தி.பா. 139:14). உன் உள் உறுப்புக்களை உண்டாக்கியவர் நாமே (தி.பா. 139:13). உன் தாய் வயிற்றிலிருந்து நான் உன்னைப் பிரித்தெடுத்தேன் (தி.பா. 71:6).

என்னை அறியாதவர்கள் என்னைத் தவறாகக் காட்டியுள்ளனர். (யோவா 8:41-44). நான் தொலைவிலும் இல்லை, உன்னில் கோபமாயுமில்லை. அன்பாய் இருக்கிறேன் (1யோவா. 4:16). உன்மேல் என் அன்பைப் பொழிய வேண்டும் என்பதே என் ஆவல் (1யோவா. 3:1). ஏனென்றால் நீ என் பிள்ளையும் நான் உன் தந்தையுமாய் இருக்கும் ஒரே ஒரு காரணத்தால் (1யோவா. 3:1). உங்கள் மண்ணகத் தந்தையைவிட அதிகமாகக் கொடைகளை வழங்குவேன் (மத்.7:11). ஏனெனில், நானே நிறைவுள்ள தந்தையாய் இருக்கிறேன் (மத். 5:48). நீ பெற்றுக்கொள்ளும் நல்ல கொடைகள் அனைத்தும், நிறைவான வரங்கள் எல்லாம் என்னிடமிருந்தே வருகின்றன (யாக். 1:17). உங்கள் தேவைகளை நிறைவு செய்பவர் நாமே (மத். 6:31-33). உங்களுக்காக நான் வகுத்துள்ள திட்டங்கள் வளமான எதிர்காலத்தையும் நம்பிக்கையையும் அளிக்கின்றன (எரே. 29:11). ஏனென்றால் நான் உன்னை முடிவில்லாது அன்பு செய்கிறேன் (எரே. 31:3).

முழு உள்ளத்தோடும் உன்னை நான் உறுதியாக நிலைநாட்டுவேன் (எரே. 32:41). நீ அறிந்திராத மாபெரும் செயல்களையும் மறைபொருட்களையும் உனக்கு நான் காட்டுவேன் (எரே. 33:3). உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் தேடினால் என்னைக் கண்டடைவாய் (இச. 4:29). என்னில் மகிழ்ச்சி கொள், உன் உள்ளத்து விருப்பங்களை நான் நிறைவேற்றுவேன் (தி.பா. 37:4). ஏனென்றால், என் திருவுளப்படி நீ செயல்படுவதற்கான விருப்பத்தையும் ஆற்றலையும் நானே தருகிறேன் (பிலி. 2:13). நீ வேண்டுவதற்கும் நினைப்பதற்கும் மேலாக அனைத்தையும் செய்ய வல்லவராயிருக்கிறேன் (எபே. 3:20)

உங்களுக்கு ஊக்கமளிப்பவரும் ஆறுதலளிப்பவரும் நானே (2தெச. 2:16-17). நானே இன்னலில் உழலும் உங்களுக்கு ஆறுதல் அளிக்கும் தந்தை (2கொரி. 1:3-4). நீ உள்ளம் உடைந்திருக்கும்போது உடனிருப்பவர் (திபா. 34:18). ஆயன் தம் மந்தையை தோளில் தூக்கிச் சுமப்பதுபோல் உன்னை நான் என் இதயத்துக்கு அருகில் சுமந்தேன் (எசாயா. 40:11). உன் கண்களிலுள்ள கண்ணீரை நான் துடைப்பேன் (தி.வெ. 21:3-4).

நானே உன் தந்தை. என் மகன் இயேசுவை அன்பு செய்வதுபோல் நான் உன்னையும் அன்பு செய்கிறேன் (யோவா. 17:23) ஏனென்றால், இயேசுவிலே நான் உன்மீது கொண்டுள்ள அன்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது (யோவா. 17:26) அவரே என்னுடைய சாயலின் அச்சுப் பதிவாக விளங்குவார் (எபிரே 1:3) நான் உன் சார்பாக இருப்பவர், உனக்கெதிராக இருப்பவரல்ல என்பதைக் காண்பிக்க வந்தவர் (உரோ. 8:31). உன் குற்றங்களைப் பொருட்படுத்துபவரல்ல என்பதை அறிவிக்க வந்தவர் (2கொரி. 5:18-19). நீ என்னோடு ஒப்புரவாகும் பொருட்டே, இயேசு இறந்தார் (2கொரி. 5:18-19). அவரது மரணம் தான் நான் உன்மீது கொண்டுள்ள அன்பின் இறுதி எல்லை (1யோவா. 4:10) என்பதைக் காட்டுகிறது.

நான் உன்மேல் கொண்டுள்ள அன்புக்காக அனைத்தையும் துறந்தேன் (உரோ. 8:31-32). என் கொடையாகிய இயேசுவை ஏற்றுக்கொண்டால் என்னையே ஏற்றுக் கொள்ளுகின்றாய் (1யோவா. 2:23). என் அன்பிலிருந்து எதுவும் உன்னைப் பிரிக்க முடியாது (உரோ. 8:38-39). எனவே, என் வீடு திரும்பி வா. இதுவரை நீ கண்டிராத பெரிய விருந்தொன்றை ஏற்பாடு செய்வேன். (லூக். 15:7). நான் என்றும் உன் தந்தையாய் இருந்தேன். என்றும் உன் தந்தையாய் இருப்பேன் (எபே. 3:15-15) விவிலியத்தில் தொடக்க நூலிலிருந்து திருவெளிப்பாடு வரை நீ காணுகின்ற இவை எனது இதயத்தின் ஏக்கம்.

என் கேள்வி... நீ என் பிள்ளையாய் இருப்பாயா? (யோவா. 1:12-13). உனக்காக என்றும் காத்திருக்கிறேன் (லூக். 15:11-32).

என்றும் அன்புள்ள
இறைதந்தை

அமைச்சர் டக்ளஸ் யாழ். ஆயரைச் சந்தித்தார்

அமைச்சர் டக்ளஸ் அவர்கள் யாழ் ஆயரை கடந்த வாரம் சந்தித்த பொழுது யாழ் ஆயர் அமைச்சரிடம், தேசிய உணர்வைக் கட்டியெழுப்பும் தேவை மேலோங்க வேண்டும். இதனூடாக எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய கௌரவமான அரசியல் தீர்வு எமது மக்களுக்கு கிடைக்க வேண்டும். இன்றைய நிலை இணக்க அரசியல் இன்றி தனித்து எதையுமே செய்ய முடியாது என யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

கடந்த 25ஆம் திகதி மாலை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூகநலத் துறை அமைச்சருமான [illegible] தேவானந்தாவை யாழ் ஆயர் தனது உத்தியோக பூர்வ இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி சந்திப்பின் போது தற்கால அரசியல் நிலைமைகள், தமிழ் பேசும் மக்களின் எதிர்கால எதிர்பார்ப்புக்கள் மற்றும் அரசியல் அபிலாஷைகள், அவற்றை தீர்ப்பதற்கான நடைமுறைச்சாத்தியமான வழிமுறைகள், அரசியல் தீர்வு முயற்சிகள் மற்றும் தமிழ் பேசும் மக்கள் தொடர்பிலான அரசாங்கத்தின் நிலைப்பாடு போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் அமைச்சர் யாழ்.ஆயருக்கு விரிவாக எடுத்து விளக்கியதுடன் எதிர்வரும் யாழ். மாநகர சபைக்கான தேர்தலில் இணக்க அரசியலை முதன்மைப்படுத்தி எமது மக்களின் நலனை கருதி ஈ.பி.டி.பி வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட முன்வந்தமை தொடர்பிலும் எடுத்துக் கூறினார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கருத்துக்களை மிகுந்த சிரத்தையுடன் செவிமடுத்த யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அரசியல் பகிர்வை முதன்மைப்படுத்திய தீர்வுத்திட்டத்தை எந்த இடத்தில் ஆரம்பிப்பது நல்லதோ, அதே இடத்தில் இருந்து ஆரம்பிக்கும்படி அமைச்சருக்கு எடுத்துக் கூறியதுடன் வன்முறை சார்ந்து சென்றவர்கள் அனுபவித்துள்ள துன்பியலில் இருந்தும் நாம் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் இன்றைய சூழ்நிலையில் இணக்க அரசியலை முன்னெடுப்பதே உகந்த வழி என்றும் தெரிவித்தார்.

''அன்னை மரியாளின் ஆன்மீகத்தை நாம் உள்வாங்குவோம''

மல்லாகம் புனித சதாசகாய மாதா ஆலய பெருவிழாவில் அருட்பணி போல் நட்சத்திரம் அடிகள்



''சமகாலத்தில் நாட்டின் ஒரு பகுதியில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மனிதப் பேரவலங்களின் சிந்தனைகளை நெஞ்சங்களில் சுமந்தபடி, எதிர்காலம் நம்பிக்கையற்ற நிலையில் நாம் எப்படி வாழ்வோம் என்ற ஏக்கப்பெருமூச்சோடு இத்திருத்தலத்தை நாடி வந்திருக்கும் பக்தர்களுக்கு சதாசகாய மாதாவின் ஆன்மீகம் பெரும் ஆறுதலைத்தருகிறது என்றால் அது மிகையாகாது. மனுக்குலத்தின் தாயாக, மக்களை வாழ்விக்க, மற்றவர்களின் சுமைகளைச் சுமந்து, இறை சித்தத்தின் அழைப்பையேற்று இறுதிவரை வாழ்ந்தவள் மரியன்னை. தனக்கென்று வாழாமல் மனுக்குலத்தின் துன்பங்களை, போராட்டங்களை, பேரவலங்களை, அழிவுகளை தனதாக்கி வாழ்ந்த அன்னையை நாம் சிந்திக்கும் போது அத் தெய்வீகப் பண்புகளை எமது வாழ்வாக்க நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம். மனித வாழ்வில் ஒவ்வொரு அங்கத்திலும் தன்னை இணைத்து வாழ்ந்த அன்னையைப் போல் எமது வாழ்வை மற்றவர்களுக்காய் மாற்ற முயல்வோம். இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் அற்ற நீர்க்குமிழி போன்ற நிச்சயமற்றது தான் எம் வாழ்வு. ஆகையால் என்றும் நிலைத்து நிற்கக் கூடிய ஆண்டவர் யேசுவின் வார்த்தைகளை நம் உள்வாங்கி, வாழ வேண்டும். பட்டம், பதவி, பொருள், சுயநலம் ஆகியவற்றைக் கடந்த நிலையில் மற்றவர்களின் சுமை, கண்ணீர், சிறுமை, வெறுமை, வரட்சி ஆகியவற்றை எமக்குரியதாக்கி வாழுவதே மரியன்னைக்கு நாம் வழங்கும் காணிக்கையாகும். நாம் தொலைத்து விட்ட கிறிஸ்தவம், ஆன்மீகம், ஆரோக்கியம், மனச்சாட்சி, பொதுநலம் ஆகியவற்றை தாயின் சந்நிதானத்தில் மீளப்பெற்று புதுவாழ்வு பெறுவோம்.

''அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்'' என்று கானாவூர் திருமண விருந்தில் மாதா மொழிந்த வார்த்தைகளை நினைவு கூர்ந்து ஆண்டவருக்குப் பிரமாணிக்கமாய் வாழ்ந்து அன்னையின் ஆன்மீகத்தைப் பின்பற்றி எம்மைப் பீடித்திருக்கும் தீமைகளில் இருந்து விடுதலை பெறுவோம்''

இவ்வாறு மல்லாகம் புனித சதாசகாய அன்னை திருத்தல பெருவிழாக் கூட்டுத்திருப்பலியைத் தலைமையேற்று நிறைவேற்றிய அருட்பணி போல் நட்சத்திரம் அடிகளார் தமது மறையுரையின் போது குறிப்பிட்டார்.

பெருவிழாத் திருப்பலியைத் தொடர்ந்து அன்னையின் திருச்சொரூபப் பவனி பக்தி விநயமாக இடம் பெற்றது. பெருந்திரளான பக்தர்கள் அன்னையின் ஆசீரைப் பெற்றனர். சுன்னாகம் பங்குத்தந்தை அருட்பணி நிருபன் நிதாறு அடிகளாரின் வழிநடத்தலோடு சகல விடயங்களும் சிறப்பாக நிறைவு பெற்றன.

சிறில் சுகந்தரன் J.P
சுன்னாகம்.

மடுமாதா தேவாலயத்துக்கு உருவச் சிலைகள் அன்பளிப்பு

இயேசு பிரான் எமது மக்களுக்காக அனுபவித்த துன்பங்களை நினைவு கூரும் முகமாக மடுமாதா தேவாலயத்தின் திறந்த வெளியரங்கில் உள்ள 14 பாத நமஸ்கார ஸ்தானங்களுக்கு 5 அடி உயரமான 45 திருவுருவச் சிலைகளை ஸ்தாபிப்பதற்கு மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் அனுமதியுடன் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

பாத நமஸ்கார ஸ்தானங்கள் 14 இல் ஸ்தாபிக்கப்படவுள்ள இந்தத் திருவுருவச் சிலைகளின் அச்சு இத்தாலியில் இருந்து கொண்டு வரப்படவுள்ளது. இதனை சிற்பியான நளின் பெர்னாந்து நிர்மாணம் செய்யவுள்ளார்.

பாத நமஸ்கார ஸ்தானங்களை 14 இற்கு 45 திருவுருவச் சிலைகளுடன் உயிர்த்தெழுந்த யேசுபிரான் 7 அடி உயரமுள்ள சிலையொன்றையும் மடுமாதா ஆலயத்திற்கு டாக்டர் ஜயலத் அன்பளிப்புச் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார். அனைத்து சிலைகளும் இறக்குமதி செய்யப்பட்ட நீண்ட காலம் பாவிக்கக்கூடிய விசேட பைபர் கிளாஸ்களைக் கொண்டு நிர்மாணிக்கப்படவுள்ளன.

மடுமாதா ஆலயத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 600 ஆண்டுகள் பழமை வாய்ந்த அன்னை மாதாவின் புனித திருச் சிலைக்கும் பாதுகாப்பான கண்ணாடிப் பெட்டகம் ஒன்றை பல வருடங்களுக்கு முன்னர் டாக்டர் ஜயலத் அன்பளிப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

- நன்றி உதயன் -

புனித பெரிய யாகப்பரின் சிறிய வரலாறு



யாகப்பரின் கல்லறை படம்

இப் புனித அருளப்பரின் சகோதரர் மீனவரான செபதேயு என்பவரின் மகன் இவரையும் இவர் சகோதரரையும் இயேசு ''இடியின் மக்கள்'' என்று அழைத்தார். பெரிய யாகப்பர் பாலஸ்தீனா நாட்டில் யூதேயா பகுதியில் நற்செய்தியை அறிவித்தார். இவர் ஸ்பெயின் நாட்டுக்குச் சென்று திருமறையைப் பரப்பியதாகவும் கூறுகிறது. ஏரோது அக்ரிப்பா காலத்தில் இடம் பெற்ற வேதகலாபனையின் போது கி.பி 4ம் ஆண்டு யெருசலேமில் தலைவெட்டப்பட்டு நம் திருமறைக்காக உயிர் தந்தார். அவருடைய சடலம் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த கொம்பஸ்தெல்லா என்னும் ஊரில் வைக்கப்பட்டுள்ளது. அவ்வூர் தொன்று தொட்டு ஒரு மாபெரும் திருயாத்திரைத் தலமாகத் திகழ்கின்றது. பல்லாயிரம் மக்கள் ஆண்டு தோறும் இத்திருத்தலத்திற்குச் சென்று புனித பெரிய யாகப்பருக்குத் தங்கள் வணக்கத்தைச் செலுத்துகின்றனர். அப்போஸ்தலர்களுள் முதல் வேத சாட்சி இவரே. **நொயலின், குருநகர்.**

அருள் மழை பொழிந்த நற்கருணை ஆண்டவர் பவனி

2009 வருடம் யூன்மாதம் 28ம் நாள் யாழ் மறைக்கோட்டம் ''நற்கருணை ஆண்டவரின்'' அபரிமிதமான அருட்பொழிவைப் பெற்ற தினம் என்று சொன்னால் அது மிகையாகாது. அன்று மாலை 3.30 மணிக்கு பழைய பூங்கா வீதியில் அமைந்திருக்கும் ''இறைநிபான இல்லத்தில்'' இருந்து ஆரம்பமான நற்கருணை ஆண்டவர் பவனி இரண்டு இடங்களில் தரித்து நின்று (பேராலயம், குருநகர் புனித யாப்பர் ஆலயம்) இறை ஆசீர் வழங்கிய பின் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் இடம்பெற்ற இறுதி ஆசீரோடு நிறைவு பெற்றது. நற்கருணை ஆண்டவர் இரண்டு இடங்களில் தரித்து நின்று இறை ஆசீர் வழங்கியமை ''ஆண்டவரே எம்மோடு தங்கும்'' (லூக் 24:29) என்ற இறைவார்த்தைக்கு அர்த்தம் கொடுப்பது போன்ற உணர்வை எமக்கு ஏற்படுத்தியது.

நற்கருணை எமது வாழ்வின் மையம்

இறைமகன் இயேசு இந்த உலகைவிட்டு வானகத்தந்தையிடம் செல்வதற்கு முன் இறுதி இரவு உணவின் போது வாழ்வின் ஊற்றும் உறைவிடமுமாய் விளங்கும் நற்கருணையை ஏற்படுத்தினார். மனித அவதாரம் எடுத்த இயேசுக்கிறிஸ்து மனிதர் அனைவரின் வாழ்வும் உயிர்ப்புமாக திகழ்கின்றார். தன்னுடைய உடனிருப்பை ஏற்படுத்த நற்கருணையை தவிர வேறு எதனையும் அவரால் தேர்ந்தெடுக்க முடியவில்லை. தன்னிடம் நம்பிக்கை கொள்வோருக்கு ஆண்டவன் இயேசு நிலைவாழ்வை அளிப்பதும் இதே நற்கருணையால்தான். ''வாழும் தந்தை என்னை அனுப்பினார். நானும் அவரால் வாழ்கின்றேன் அதுபோல் என்னை உண்போரும் என்னால் வாழ்வர்'' (யோவான் 6:57) என்ற இறைவார்த்தைக்கேற்ப திவ்விய நற்கருணை திருச்சபையின் நம்பிக்கை மையமாக திகழ்கின்றது. ''ஆண்டவரின் வாழ்வு இருந்தது அவ்வாழ்வு மனிதருக்கு ஒளியாய் இருந்தது அந்த ஒளி இருளில் ஒளிர்ந்தது (யோவா 1:4-5) என்ற இறைவார்த்தையின்படி நற்கருணை விசுவாசிகளின் வாழ்வில் ஒளியாய் அமைகின்றது. ஆண்டவன் இயேசு வானகத்தந்தைக்கும் திருச்சபைக்கும் அதாவது எமக்கும் அளித்த ஒரு உன்னதமான ஒப்பற்ற பரிசுதான் நற்கருணை இது மீட்பின் பலியாகவும், திருவிருந்தாகவும் அமைந்தது. எமது வாழ்வின் மையமாக திகழ்ந்து எமக்கு நிலைவாழ்வை பெற்றுத் தருகின்றது.

வேதாகமத்தில் நற்கருணை பவனி

வாக்கு மாறாதவராக உண்மையுள்ளவராக இருக்கும் வானகத்தந்தை ஆதிப்பெற்றோருக்கு கொடுத்த வாக்குறுதியின்படி தூய மரியாளிடம் தன்னுடைய மகன் கிறிஸ்துவை பிறக்க வைக்கின்றார். ''நான் ஆண்டவரின் அடிமை'' (லூக் 1:38) என்று சொல்லி வானகத்தந்தையின் மீட்புத்திட்டத்திற்கு தன்னை முழுமையாக ஒப்படைத்து, ஒப்புதல் கொடுத்த புனித மரியாளை ''வரலாற்றின் முதலாவது நற்கருணைப்பேழை'' என்று அழைக்கின்றோம். மறைந்த முன்னாள் திருத்தந்தை தூய இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் 2003ம் ஆண்டு வெளியிட்ட ''திருப்பலியில் ஒன்றிப்பு'' எனும் சுற்றுமடலின் 6ம் அதிகாரத்தில் ''தூய கன்னி மரியாள் வரலாற்றின் முதல் திருப்பேழை'' என்று குறிப்பிடுகின்றார். உதரத்திலே கிறிஸ்துவை தாங்கி தாழ்ச்சியுடன், பிறரன்புடன் உடையவளாக எலிசபெத்தை சந்திக்க தூய கன்னி மரியாள் பயணிக்கிறாள்.

இதனை நாம் முதலாவது நற்கருணை பவனியாக கொள்ளலாம் (நசரேத்து - யூதேயா) லூக் 01 :39-45 [illegible] காலங்களில் குடிசன மதிப்பீட்டுக்காக தனது கணவர் தூய சூசையப்பருடன் நசரேத்து ஊரில் இருந்து பெத்லகேமுக்கு (லூக் 2:1-7) சென்றமை, ஏரோது குழந்தை இயேசுவைக் கொல்லத்தேடிய போது கனவில் எச்சரிக்கப்பட்டு குழந்தை இயேசுவை எகிப்துக்கு கொண்டு சென்றமை (மத் 2:13-15) சிறுவனான யேசு பன்னிரண்டு வயதில் பாஸ்கா விழாவைக் கொண்டாட எருசலேமுக்கு பெற்றோருடன் சென்றமை (லூக் 2:41-53) ஒலிவ மரக்கிளைகளை கரம் தாங்கிய மக்கள் புடைசூழ்ந்து ஓசன்னா பாட வெற்றி ஆர்ப்பரிப்புடன் ஜெருசலேமுக்குள் நுழைந்தமை (லூக் 19: 28-30) இவை எல்லாம் நற்கருணையை ஏற்படுத்த முன் நற்கருணை ஆண்டவரான இயேசு மேற்கொண்ட பவனிகள். நற்கருணையை ஏற்படுத்திய பின் கல்வாரி நோக்கி இரத்தம் சிந்த நடந்த உன்னதமான பவனி இறைமகன் இயேசு உயிரோடு நடந்த பவனியாகும் (லூக் 23:26-33)

பவனியின் பாதையிலே

நற்கருணைப்பவனியிலே பெருந்தொகை விசுவாசிகள் பங்குபற்றினார்கள். பக்தி பரவசமாக அருள் நிறைவாக பொழியப்பட்ட இந்நாள் ஒரு இறை அனுபவத்தை எமக்குத் தந்தது. பெரும்பாலான மக்கள் நற்கருணையைக் குறிக்கும் வெள்ளை உடை அணிந்து கரத்திலே சிவப்பு வெள்ளைக்கொடியைத் தாங்கி ஆண்டவர் எம்மோடு பயணிக்கிறார். நாம் ஆண்டவரோடு பயணிக்கின்றோம் என்ற உள்ளார்ந்த உணர்வோடு பங்கெடுத்தனர். பாடல்கள், பஜனைகள், புகழ்ச்சிகள், எல்லாம் நற்கருணை ஆண்டவரோடு எம்மை நெருக்கமாக இணையவைத்தது.

பேராலயத்திலே இடம் பெற்ற வழிபாட்டில் தூய லூக்கா நற்செய்தியில் இருந்து ''எம்மாவு வழியில் சீடர்களை சந்தித்தல் எனும் பகுதி (லூக் 24:13-35) சிந்தனைக்கு எடுக்கப்பட்ட அருட்பணி S.A அருட்செல்வன் அடிகள் ''ஆண்டவன் இயேசுவின் உடனிருப்பும் அதன் மகத்துவமும் பற்றி எடுத்துக் கூறி நற்கருணையோடு எம்மை ஒன்றிணைக்கச் செய்தார்.

தூய யாகப்பர் ஆலயத்தில் இடம் பெற்ற வழிபாட்டில் கொரிந்தியருக்கு எழுதிய 1ம் திருமுகத்தில் இருந்து (1 கொரி 11-17-27) ''ஆண்டவரின் திருவிருந்து'' என்னும் பகுதி சிந்தனைக்கு எடுக்கப்பட்டு ஆண்டவர் இயேசுவின் திருவிருந்தில பங்கெடுக்கும் நாம் நற்கருணையோடு ஒன்றித்து வாழ்வதன் மூலம் கிறிஸ்தவ ஒன்றிப்பில் வாழ்வதற்கு அருட்பணி மகன் அலோசியஸ் அடிகள் அழைத்திருந்தார்.

இறுதி நிகழ்வாக அடைக்கல அன்னை ஆலயத்தில் இடம் பெற்ற வழிபாட்டில் இரத்தப்போக்குடைய பெண் நலமடைதல் எனும் பகுதி (லூக் 8.40-48) சிந்தனைக்கு எடுக்கப்பட்டு ஆண்டவரின் வல்லமை எமக்கு நலமளிக்கும், குணமாக்கும் ஆண்டவர் என்றும் எம்மோடு உள்ளார் என்று அருட்பணி லோசிங்ரன் (OMI) அடிகள் மறையுரை ஆற்றி மக்களை திடப்படுத்தினார்.

முடிவாக

நற்கருணை ஆண்டவரின் பவனியும் ஆசீரும் நாம் புது மனிதராக மாற அவரோடு இணைந்து வாழ எமக்கு அழைப்பு விடுக்கின்றது. எமது வாழ்வின் சுமைகளை எல்லாம் அவரின் உடனிருப்பு இலகுவாக்கின்றது. அவருடைய பிரசன்னத்தில் அருங்குறிகளும் நடைபெறுகின்றது. எனவே இவ்வாறான பவனிகள் எதிர்காலத்திலும் முன்னெடுக்கப்படவேண்டும். அதன் மூலம் மக்கள் ஆன்மீக வாழ்வில் புதுப்பிறப்படைந்து கிறிஸ்துவைப் போல் மாறவும் அவருடைய பண்புகளை வாழ்வில் கடைப்பிடிக்கவும் வழிகோலும்.

இ.அ அமலரட்ணம்
பேராலயம்.

மண்டைதீவுப் பங்கின் புனித பேருதுவானவர் பெருவிழா

உயர் பாதுகாப்பு வலயத்திலே அமைந்துள்ள மண்டைத்தீவுப் பங்கின் பாதுகாவலர் புனித பேருதுவானவரின் பெருவிழா ஆவணி 1ம் நாள் புத்துணர்வுடன் கொண்டாட திட்டமிடப்பட்டுள்ளது. 'கிறிஸ்துவில் புதிய வாழ்வை கட்டியெழுப்புவோம்' எனும் கருப்பொருளிலே நவநாட்கால வழிபாடுகள் ஆடி 23ம் திகதி பி.ப 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றன. ஆடி 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பங்கின் சிறார்களுக்கு முதல் நன்மையும் வழங்கப்படவுள்ளது. கடைசி இரு நாட்களுக்குமான வழிபாடுகளில் இறைமக்கள் கலந்து கொள்ள வசதியாக இ.போ.ச பஸ் சேவை கடற்படையினரின் அனுசரணையுடன் இடம்பெறவுள்ளது. திருநாட் திருப்பலி காலை 7.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும். புனிதரின் ஆசீரைப் பெற இறைமக்களை பங்குத்தந்தையும் பங்கு மக்களும் அன்புடன் அழைக்கின்றனர்.

குருக்கள் ஆண்டு
ஜூன் 2009 - ஜூன் 2010



50 வது யூபிலி விழா காணும் அருட்திரு ச.யோ.பிரான்சிஸ் அ.மதி அடிகளார்



யாழ் வலிகாமம் வடக்கு பிரிவின் கடல் வளமும், நிலவளமும், ஒருங்கே அமைந்த புராதன கிராமங்களில் மாதகலும் முக்கியத்துவம் பெறுகின்றது. இங்கே கிறிஸ்தவமும், சைவமும் செழித்தோங்கி வளர்ந்து வருவதுடன் சிறந்த பண்பாடுகளுடன் கூடிய ஓர் உயரிய சமூக அமைப்பாகவும் இக்கிராமம் திகழ்கின்றது.

மாதகலில் கிறிஸ்தவர்கள் செறிப்பாக வாழும் பகுதியின் மத்தியில் புனித தோமையாரின் அழகிய ஆலயம் கெம்பீரமாக எழுந்து நிற்பது இக்கிராமத்துக்குரிய தனிச்சிறப்பாகும். இவ்வாலய நிழலில் வாழ்ந்து வந்த பழம்பெரும் கிறிஸ்தவர்களான யோசேப்பு யோகத்தம்மாள் தம்பதியினரின் ஏக புதல்வனான அருட்திரு. ச.யோ.பிரான்சிஸ் அடிகளார், மரியன்னை மீது கொண்ட பக்தியின் காரணமாக தன்னை அமலமரித்தியாகிகள் சபையில் அர்ப்பணித்துக் கொண்டார். தமது குருத்துவ வாழ்வில் இறைவனுக்காக நீண்ட பணிகளை தொடர்ந்த இவர் தமது 50 ஆண்டுகள் நிறைவில் யூபிலி விழாவினை கடந்த 13.06.2009 தினத்தன்று புனித அந்தோனியாருடைய நாளில் கொண்டாடி மகிழ்ந்தார்.

இவரது யூபிலி விழா நீர்கொழும்பு கொச்சிக்கடை செபமாலைதாசர் சபை சிற்றாலயத்தில் சிறப்பிக்கப்பட்டது. இவ்விழாவுக்கு வருகை தந்த யூபிலி நாயகனையும், ஏனைய குருக்களையும், அருட்சகோதரிகளையும் அங்கு வருகை தந்திருந்த பெருமக்கள் மாலை அணிவித்து ஆராத்தி எடுத்து திருப்பலிப்பீடத்திற்கு அழைத்து சென்றனர். நன்றித் திருப்பலியினை ஒப்புக்கொடுத்தமை கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது. இங்கு மறையுரை ஆற்றிய பொன்விழா நாயகர் உன் பிடிகளை தளர்த்திவிடு, உன்னில் அவரே செயற்பட விட்டுவிடு என்னும் கருப்பொருளின் ஆழமான தத்துவங்களை எடுத்து இயம்பியமை கூடி இருந்த அனைவரது உள்ளங்களையும் தொட்டதாக அமைந்திருந்தது.

திருப்பலி முடிவில் யூபிலி நாயகர் அவர்கள் ஆலய முன்றலில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். தொடர்ந்து செபமாலைதாசர் சபை தலைவர் அருட்திரு. ம.ஸ்ரீபன் அடிகளார் விழாநாயகர் அவர்களின் குருத்துவ வாழ்வின் சிறப்பு பணிகளையும், அதி உயர் ஆன்மீக வாழ்வு பற்றியும் விரிவாக எடுத்துரைத்ததுடன் சமூகம் அளித்த அனைவரது சார்பிலும் யூபிலி நாயகருக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார். அருட்தந்தை ச.யோ. பிரான்சிஸ் அடிகளார் தமது ஆரம்ப கல்வியை மாதகல் புனித தோமையார் பாடசாலையிலும், புனித சூசையப்பர் பாடசாலையிலும் உயர்கல்வியை இளவாலை புனித கென்றி அரசர் கல்லூரியிலும் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்று முடித்தார். சிறுவயதிலே குருத்துவ அழைப்பினால் உந்தப்பட்ட இவர் யாழ் புனித மாட்டீன் குருமடத்தில் இணைந்து கொண்டார். அமலமரி தியாகிகள் சபையில் தன்னை அர்ப்பணிக்க திட்டமிட்ட இவர் ஆரம்ப குருத்துவக் கல்வியை களுத்துறை, நுகேகொடை, ஆகிய இடங்களில் உள்ள கல்லூரியில் தொடர்ந்தார். சற்றில் கண்டி அம்பிட்டியா தேசிய குருத்துவக்கல்லூரியிலும் குருத்துவ உயர் கல்வியை கற்று முடித்தார். தொடர்ந்து 13.06.1959 திகதி கண்டி குருத்துவக் கல்லூரி ஆலயத்தில் முன்னாள் ஆயர் பேரருட்திரு. ரெஞ்சியோ அடிகளாரால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் தனது முதல் திருப்பலியை மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் ஒப்புக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட பிரான்சிஸ் அடிகளார் தமது பணிகளை யாழ் மாவட்டத்தில் ஊர்காவற்துறை, பண்டத்தரிப்பு, சேந்தான்குளம், வதிரி, கரவெட்டி, அச்சுவேலி, குருநகர் பங்குகளிலும் பணியாற்றினார். ஆன்மீகத் துறையில் அதிக ஈடுபாடு கொண்ட இவர் அருங்கொடைகள் இயக்கத்திலும் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் சிறிது காலம் இந்தியாவிலும் பணியாற்றியுள்ளார். மேலும் இவரது பணிவாழ்வு சிறந்து விளங்க விழா நாயகரை வாழ்த்தி இறைவனை வேண்டுவோம்.

மாதகல் மண்ணின்
குருமணியே வாழ்க!
அமல மரி தாயவளின்
தாய்த்திருவே வாழ்க!
தோமையார் பெருமை சேர்
நல்குருவே வாழ்க!
யோசேப்பு யோகத்தாள்
மனநிறைவே வாழ்க!
யூபிலி விழாகாணும்
அருள் நிறைவே வாழ்க!

பணி வாழ்வில் எம் குருக்கள்

பணி வாழ்வாம் இறைபணியை
பாருலகில் ஆற்றிவரும் எம் குருக்கள்
பாரந்தாங்கிகளாகப் பார்ப்பவர் மகிழ்ந்திட
பாச உணர்வுடன் ஆற்றிவரும் பணிதான் எத்தனை எத்தனை?

சமகாலக் குருக்கள் சமதர்மம் ஓங்க
சமூகத்தின் பணியே தம் பணியென
சாதிமத பேதம் பாராது ஆற்றிவரும், இறை இயேசுவின்
சான்று வாழ்வு தான் எத்தனை எத்தனை?

மக்களோடு மக்களாக இரவு பகல் பாராது
மனித மாண்பை மதித்து
மகத்தான சேவை செய்யும் எம் குருக்கள்
மனநிறைவுடன் வாழ மனமார வாழ்த்துகின்றோம்

கன்னி வாழ்வாம் வனவாசம் நிறைந்த வாழ்வால்
வருத்தங்களையும் வாதைகளையும் சுமந்து நின்று
வருந்துவோர்க்கு உதவிக்கரம் நீட்டி நிற்கும்
வற்றாத குரு உள்ளங்கள்தான் எத்தனை எத்தனை?

ஆழமான வாழ்வு ஆன்மீக வாழ்வெனவும்
ஆண்டவர் இயேசுவின் வாழ்வுதான் எம் வாழ்வெனவும்
அற்புதங்கள் பல செய்து ஆலயங்களில் முழங்கி நின்று
அயராது உழைத்திடும் அன்புக் குருக்கள்தான் எத்தனை எத்தனை?

கல்விச் சாலைகளில் கலங்கரை விளக்குகளாய்
கண்கண்ட தெய்வங்களாய்
கரும் பணி ஆற்றிக் காலத்தைக் கழிக்கும்
கருணையுள்ள குருக்கள்தான் எத்தனை எத்தனை?

பற்பல பணிகள் பல ஆற்றியும்
பரமன் இயேசுவின் பாதம் பணிந்து எமக்காய்
பரிந்துரைக்கும் எம் குருக்கள்
பல ஆண்டு காலம் உடல், உள, ஆன்மீக நலம் பெற்றும் பணி புரிய
பரிந்துரைக்கின்றோம் பரமன் இயேசுவிடம்

திருமதி. செல்வராணி
ஞானரட்ணம்,
சுன்னாகம்.

திருச்சபை என்னும்... (2ம் பக்கத் தொடர்ச்சி...)

பிரதிபலிப்பவர்களே குருக்கள். இத்தகைய பாரிய பொறுப்புக்களை ஏற்று பணியாற்றும் குருக்கள் மட்டில் பொதுநிலையினரின் கடமைகள் முக்கியமானவை. தங்களுக்காக பணியாற்றும் குருக்களுக்காக செபிப்பதும், அவர்கள் பணிக்களங்களில் அவர்களுக்கு ஒத்துப்போதலும், வருங்கால குருக்களை உருவாக்குதலும், குருக்களின் நல் வாழ்விற்காக உழைத்தலும் அவசியமானவை.

சவால்களைத் துணிந்து ஏற்காமல், பிரச்சினைகளைத் துணிவோடு சந்திக்காமல், போலியான அமைதியைத் தேடி, இறை நம்பிக்கையை இழந்து மனிதர்களின் புகழுரைகளுக்காக தங்களின் விருப்பப்படி வாழும் வாழ்வு உண்மையான ஒரு குருவுக்குரிய வாழ்வு அல்ல. காலத்தின் நியதிகளால், காலமாற்றங்களினால், எழும் சவால்களிலிருந்தும், காலத்தின் அறிகுறிகளிலிருந்தும், பணிச் சூழல்களிலிருந்தும், பணியாற்றும் மக்களிடமிருந்தும் குருக்கள் கற்றுக் கொள்ளத் தயாராக இருந்தால் அவர்கள் வாழ்வில் வரும் பிரச்சினைகளும் சவால்களும் தடைக்கற்களல்ல மாறாக படிக்கற்களாகவே அமையும் என்பதில் ஐயமில்லை.

ஒரு குருவின் பணி கடவுளின் மகிமைக்காகவும், திருச்சபையின் நன்மைக்காகவும், ஏழை மக்களின் நல்வாழ்விற்காகவும் அர்ப்பணிக்கப்படுகிறது. அந்த உண்மையான வாழ்வில் இயேசுவின் மறு உருவத்தைக் காண முடியும். எனவே திருச்சபை என்கின்ற உறவுப்பாலத்தில் ஒளித்தூண்களாக இலங்கி இறைமக்களை இறைவனை நோக்கி வழிநடத்துபவர்களே குருக்கள்.

திருத்தந்தை அருட்பணியாளருக்கு விடுக்கும் அறைகூவல்

அருட்பணியாளருக்கான 2009 அர்ப்பணிப்பு

திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் 2009 ம் வருடத்தை அருட்பணியாளர்களின் வருடமாக கடந்த யூன் 19இல் பிரகடனப்படுத்திச் சிறப்பித்துள்ளார். இவ்வருடத்தில் இறையடி சேர்ந்து 150 வருடத்தை நிறைவு செய்யும் புனிதரான அருட்பணியாளர் மரிய வியான்னி அவர்கள் நினைவு கூறப்படுவது இப்பிரகடனத்தை மேலும் சிறப்பூட்டுகின்றது. இவ்வாறு இவ்வருடத்தை அருட்பணியாளரின் ஆண்டாக பிரகடனப்படுத்தியமை பல்வேறு மட்டங்களில் இருந்தும் ஆதரவை பெற்றுள்ளது. அருட்பணியாளர்கள் மத்தியில் இருந்தும் சாதகமான குரல்களை எழுப்பியுள்ளது குறிப்பிடத்தக்கது.

நன்றியும் பெருவகையும்

இந்த வருட காலத்தில் நாம் அருட்பணியாளர்களுக்கு மட்டுமில்லாது அனைத்து கிறிஸ்தவ சமூகத்திற்கும் அத்துடன் அனைத்துலக ஊடகங்களுக்கும் கூற விரும்புவது என்னவென்றால், எமது கத்தோலிக்க அருட்பணியாளர்கள் பற்றி நாம் பெருமைப்பட்டுக் கொள்வதுடன் அவர்களை நாம் அன்பு செய்து, உயர் நிலையில் மதித்துக் கொள்கின்றோம் அவர்கள் எமக்காக மேற்கொள்ளும் ஆன்மீக பராமரிப்புக்காகவும், தமது வாழ்வை எமக்காக தியாகத்துடன் அர்ப்பணித்து கிறிஸ்துவின் கொள்கைகளைச் சாட்சிகளாய் வாழும் இவர்களுக்கு இவ்வேளையில் எமது உயர்வான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சீடர்களாக அறிமுகப்படுத்திக் கொள்ளுதலும் இறையியல் ஆழமும் அவசியம்

இறை அழைத்தலில் பங்கேற்றுள்ள அருட்பணியாளர்களுக்காக பிரகடனப்படுத்தப்பட்ட இவ்வருடம் நம்மை இறையேசுவின் அன்புச் சீடர்களாக அடையாளப்படுத்திக் கொள்ளவும் கத்தோலிக்க இறையியல் நன்கு ஆழமான அறிவை பெறுக் கொள்ளவும் அவர்களுக்கு சந்தர்ப்பத்தைக் கொடுக்கின்றது. தாம் எப்பணிக்காக இறைவனால் அழைக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளார்கள் என்பதை அவர்கள் மேலும் உணர்ந்து கொண்டு அதை ஆலய வட்டத்திலும் சமூக வட்டத்திலும் வளர்ச்சியடையச் செய்தும் அந்த மதிப்பீடுகளுக்கு எடுத்துக்காட்டாக வாழ்வதும் இன்றைய தேவையாக உள்ளது. இதற்காக ஆயரின் ஏற்பாட்டில் மேலதிக இறையியல், மெய்யியல் கருத்தரங்குகளும் இன்றைய சூழமைவுக்கேற்ப ஆய்வுகளும் மேற்கொள்ள வேண்டும். அத்துடன் பொதுநிலையினரின் கருத்துக்களும் கேட்கப்பட்டு அவர்கள் விரும்பும் பொறுப்புக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

மாற்றங்கள் ஆலோசனைகள் தேவை

கடந்த மார்ச் 16இல் இடம்பெற்ற துறவற சபையினருக்கான பொது மாநாட்டில் அருட்பணியாளர்களின் வருடத்தை பிரகடனப்படுத்தி உரையாற்றிய திருத்தந்தை 16ம் பெனடிக்ற், இந்த விசேட வருடத்தின் நோக்கமாக, அருட்பணியாளர்கள் துறவி நிலையில் முழு நிறைவு பெற்றவர்களாகவும், தமது பணிகளில் திட்டமிட்டு செயலாற்றுபவர்களாகவும், இருப்பதற்கு அனைவரும் செயலாற்ற வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். ஆகவே இந்த வருடம் விசேடமாக அருட்பணியாளர்களுக்கு செபத்தின் வருடமாக இருக்க வேண்டும். அருட்பணியாளர்கள் தமக்காகவும், சக துறவிகளுக்காகவும், பிற அருட்பணியாளர்களுக்காகவும் செபித்தல் வேண்டும். இந்த நோக்கத்தை சரிவர நிறைவேற்ற திருப்பலி வழிபாடுகள் அருட்பணியாளர்களை புனிதப்படுத்தும் மையப்பொருளாக அமைய வேண்டும். அத்துடன் பெண் துறவிகள், திருநிலைப்படுத்தப்பட்ட பெண்கள், மற்றும் பொதுவாக பெண்களை திருநிலைப்படுத்த முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் மேலும் வளர்க்கப்படுவதுடன் ஆரோக்கியமான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அருட்பணியாளர்களின் வறுமை நிலை அகற்றப்பட வேண்டும்

அருட்பணியாளர்களுக்கான இவ்வருடத்தில் அவர்களின் அடிப்படையான வாழ்க்கை நிலை ஆய்வுக்குள்ளாக்கப்பட வேண்டும். பல வேளைகளில் அவர்கள் மிகவும் வறுமை நிலையில் வாழ நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு தகுந்த நிதியுதவி வழங்கப்பட்டு அவர்கள் ஏழ்மை நிலை மாற்றப்பட வேண்டும். இந்த வருடத்தில் மறை ரீதியாக வெளிப்படையாக குருத்துவத்தை ஊக்குவிக்கும் விழாக்களை ஏற்பாடு செய்வதுடன், இறை மக்களும் கத்தோலிக்க சமூகமும் அருட்பணியாளர்களுக்காக செபிப்பதுடன், திருப்பலிகள் தியான வழிபாடுகளை மேற்கொண்டு அவர்களை நண்பர்களாக ஏற்றுக் கொள்ளவும் வேண்டும். அத்துடன் இவ்வழிபாடுகள் மற்றும் விழாக்கள் அருட்பணியாளர்களை மக்களின் நண்பர்களாக்குவதற்கும் அவர்களில் நம்பிக்கை வைப்பதற்கும் உதவ வேண்டும். இதற்கும் மேலாக ஆயர் ஒன்றிய வட்டத்தில் கத்தோலிக்க பங்குகளில் இதற்கான நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.

துன்ப துயரங்கள் மத்தியில் பணியாற்றும் தமிழ் அருட்பணியாளர்கள்

அருட்பணியாளர்களுக்கான இவ் விசேட வருடத்தில் தமிழ் கத்தோலிக்க சமூகம் மிகப் பெரும் நன்றியறிதலுடன் தமிழ் அருட்பணியாளர்களை நினைவு கூருவ

(8ம் பக்கம் பார்க்க...)

ஞாயிறு தியானத்துளிகள்

அருட்திரு.யே.அ.அருள்தாசன்

பொதுக்காலம் 19ம் ஞாயிறு

"உயிரின் ஊற்றே உன்னையின் உணவே, உறவின் விருந்தே எம் ஆண்டவரே வாரும்!"

"விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வுதரும் உணவு நானே. இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார். எனது சதையை உணவாகக் கொடுக்கிறேன். அதை உலகு வாழ்வதற்காகவே கொடுக்கிறேன்" (யோவா 6:51)

நற்கருணை கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் சிகரமும்" என்பது திருச்சபையின் ஆசிரியர் எமக்குப் போதிக்கும் தத்துவ பேருண்மையாகும். கிறிஸ்தவ வாழ்வு ஊற்றெடுப்பது நற்கருணை மூலமாகவேயாகும். கிறிஸ்தவ வாழ்வின் மூச்சாகவும் மூலகாரணமாகவும், உயிராகவும் முதலிடம் பெறுவது நற்கருணையேயாகும்.

கிறிஸ்தவம் வெறும் கொள்கைகளையும், சடங்குகளையும் நியமங்களையும் கொண்ட மதமல்ல, மாறாக அது பிரமாணிக்கம் அன்பு, மன்னிப்பு, தியாகம், போன்ற நல்லறங்களை எண்பிக்கும் வாழ்க்கை முறை எனலாம்.

கிறிஸ்து தன்னை உடைத்துப் பகிர்ந்து கொடுத்தது போல, தன்னை உருக்கி ஒளி கொடுக்கும் மெழுகுவர்த்தி போல, நாமும் பிறர் நலம் பெற்று வாழ எம்மை உடைத்துக் கொடுக்க வேண்டுமென்பதை எண்பித்துக் காண்பிக்கும் ஒப்புயர்வற்ற கிறிஸ்துவின் அடையாள நிலைமைச் சின்னமே தேவநற்கருணையாகும். தேவநற்கருணை என்பது வெறும் நினைவும், அடையாளமும் மட்டுமல்ல அது கிறிஸ்துவின் மெய்யான இருப்பும் பிரசன்னமுமாகும்.

"இதை அனைவரும் வாங்கி உண்ணுங்கள்", "இதனை அனைவரும் வாங்கிப்பருகுங்கள்", என்று தன்னைப் பிறருக்குக் கையளித்த தன்னலை அன்பை நாம் வாழத் தூண்டும் அருமருந்து, கிறிஸ்துவின் மனநிலையை எம்மில் வளர்க்கும் தெய்வீகத்திருவுணவே நற்கருணையாகும்.

அதாவது குறுகிய மனநிலையிலிருந்து பரந்துபட்ட மனநிலையை எம்மில் உருவாக்கும் "அனைவரும் வாங்கி... உண்ணும் திருவுணவு

தான், தன் குடும்பம், தன் உறவு என்ற மனநிலையிலிருந்து பொதுப்பாட்டை மட் சகோதர பரந்த மனநிலையையும் நற்கருணை எம்மில் வளர்க்க வேண்டும்.

நற்கருணையின் உள்ளார்ந்த ஆன்மீக எல்லா மகிமைகளையும் அர்த்தத்தையும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆழ்ந்து சிந்தித்து, தியானித்து அதன் பால் மிகுந்த பற்றையும் பிரமாணிக்கம் நிறைந்த பக்தியையும் வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

உடல் நலிவடைந்த, பலவீனமானவர்களுக்கு வைத்தியர்கள் "Tonic" எனப்பட்ட மருந்தை சிபார்சு செய்வார்கள். அதுபோல ஆன்ம பலம் குன்றியோருக்கு பலம் அளித்துப் பலப்படுத்தும் அருமருந்தாக நற்கருணை விளங்குகிறது.

இயலாமையில் இருப்பவர்களுக்கு உதவும் வலுவைப் பெறவும் சகோதர உறவை வளப்படுத்தவும் மன்னித்து வாழும் மனப்பாங்கை வளர்க்கவும்; துன்பத்தின் மத்தியில் உறுதிதரவும் நற்கருணை வல்லமளிக்கவல்லது.

நற்கருணையின் திருத்தந்தை எனப்படும் 10ம் பத்திநாதர் திருச்சபையில் அனுதினமும் நற்கருணை பெற கத்தோலிக்கர்களுக்கு அனுமதி வழங்கினார்.

"சுத்த கருத்துடன் நற்கருணை உட்கொள்ளப்பட வேண்டும்" எனப்பணித்தார். அதாவது மற்றவர்களுக்கு உதவ, மற்றவருக்கு வாழ்வளிக்கும் நற்செயலுக்கு வலுவூட்டும் அருட்சாதனம் இதுவாகும். இந்த நோக்கத்துடனேயே அதை உட்கொள்ள வேண்டும்.

நற்கருணையைப் "பழக்கதோசமாக", "பக்தி உருக்கமின்றி" உட்கொள்ளும் வழக்கத்தை மறுத்து, பூரண உடல் ஆன்ம ஆவலோடும் ஆயத்தத்தோடும் உட்கொண்டு சகோதர நட்புறவிலும் பண்பிலும் பாசத்திலும் உருப்பெற்ற ஒப்புயர்வற்ற தார்மீக சமுதாயம் படைத்து வாழ அர்ப்பணிப்புடன் செயல்படுவோம்.

பொதுக்காலம் 20ம் ஞாயிறு

"கிறிஸ்தவ வாழ்வின் உறவின் விருந்தே! எம் ஆன்ம விருந்தே! இயேசுவே வாரும்."

"எனது சதையை உண்டு எனது இரத்தத்தைக் குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர். நானும் அவர்களோடு இணைந்திருப்பேன்", (யோவா 6:56)

சமூகக் கொண்டாட்டங்களிலே, விழாக்களிலே விருந்து முக்கியத்துவம் பெறுகிறது. விருந்து நல்லுறவின் சகோதரத்துவத்தின், நட்புறவின், தோழமையின் வெளிப்பாடாகவும், பாசத்தின், தியாகத்தின் குறிகாட்டியாகவும் விளங்குகிறது. ஒற்றுமையையும், சமத்துவத்தையும் விருந்துக் கொண்டாட்டங்களிலே காண முடியும்.

திருப்பலியும் ஒரு சமூக கிறிஸ்தவக் கொண்டாட்டமாகும். ஆயினும் அத்திருப்பலிக் கொண்டாட்ட விருந்து உள்ளார்ந்த ரீதியில் வெளிப்படுத்தும் உண்மையான சமத்துவ சகோதரத்துவத்தை கிறிஸ்தவர்கள் உள்ளார்ந்த ரீதியில் கொண்டிராத வரையில் அத்திருப்பலி விருந்தின் பயனை கிறிஸ்தவர்கள் தம் வாழ்வில் ஒருபோதும் அடையமுடியாது.

பிரிவினையும் போட்டி, பொறாமை, கட்சிமனப்பான்மை அகங்காரம், ஆணவம் அதிகார வெறி, அடக்குமுறை மலிந்த இந்தச் சமுதாயத்தில் விதைக்கப்படவும் வாழப்படவும் வேண்டியது ஒற்றுமையும் சமத்துவ சகோதரத்துவமுமே. இதை எமக்கு வலியுறுத்தவல்லது நற்கருணை ஒன்றேயாகும். எனவே நற்கருணை நம் வாழ்வின் மையமாக வேண்டும் என்பதே இயேசுவின் ஏக்கமாகும். நற்கருணையில் அவரது உயிருள்ள உடலை அடையாளமாக நம்பிக்கையின் அடிப்படையில் காண்கின்றோம். இந்த நற்கருணை என்னும் அருள் அடையாளம் நம்மை ஓர் சகோதர சமூகமாக ஒன்று சேர்க்கிறது. நமது வாழ்வின் பொருளைப் புரிந்து கொள்ளப் புத்தொளி தருகிறது. நமது கவலைகளைக் கடந்து நிற்கும் எதார்த்தங்களை சிந்தனைக்குக் கொண்டு வருகிறது. இந்தப் பின்னணியில் நற்கருணை இயேசுவின் இறையாட்சிக் கனவை நனவாக்குவதற்கு அழைப்பு விடுக்கின்றது.

"இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்ற இயேசுவின் நற்கருணை அழைப்பு அவரைப்போல பிறர்நலனில் அக்கறை கொண்டவர்களாக வாழ நம்மை இட்டுச் செல்லும் குரலாகும்.

கிறிஸ்து இயேசுவால் நாம் வாழ்வு பெறவேண்டும் என்பதே அவர் எமக்கு விடுக்கும் அழைப்பாகும். "விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவு நானே" (யோவா 6:51)

நாம் உட்கொள்ளும் உணவு நம்மை உயிருடன் வைத்துள்ளது. இது உடல் சார்ந்த வாழ்வு. ஆனால் இயேசு குறிப்பிடும் ஆன்மீக வாழ்விற்கு அவரை நமக்குள் வரவழைக்க வேண்டும். இந்நற்கருணை எம்மை மறு கிறிஸ்துக்களாக உருமாற்றி உருவாக்கி அவரை எம்மில் வளரச் செய்து அவராகவே எம்மை ஆக்குகின்றது.

கிறிஸ்து இல்லாத நற்கருணைக்குச் சிறப்பில்லை. அதுபோலவே நற்கருணை இல்லாத திருப்பலியும் இல்லை. இந்த நற்கருணைத் திருப்பலிக் கொண்டாட்டம் ஒரிரு மணி நேரங்களுக்குள் தொடங்கி நிறைவுறும் ஒரு வெறும் வைபவமல்ல. மாறாக அது ஒரு தொடரும் வாழ்க்கைப்பலி என்பது ஒவ்வொரு கிறிஸ்தவனதும் உள்ளங்களுக்குள்ளும் முள்ளெனத் தைத்துக் கொள்ளட்டும். நிகழ்த்தப்படும் பலியேற்ப எமது வாழ்வை நாம் அமைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு கல்வாரிப்பலியின் நிறைவும் வாழ்க்கைப்பலியின் தொடக்கமாகட்டும். சீர் குலைந்து செல்லும் கிறிஸ்தவ வாழ்வைச் சீர் செய்யும் ஊடகமாகத் திருப்பலி அமைவதாக.

"..... கடவுளுக்கு உகந்த தூய, உயிருள்ள பலியாக உங்களைப் படையுங்கள். இதுவே நீங்கள் செய்யும் உள்ளார்ந்த வழிபாடு." (உரோ 12:1)

கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தினரின் நலன்புரி நிலையங்களுக்கான உதவி

கரித்தாஸ்-கியூடெக் நிறுவனம் கடந்த மூன்று மாதங்களில் 11.4 மில்லியன் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்களை குடாநாட்டு நலன்புரி நிலைய மக்களுக்கு வழங்கியுள்ளதாக நிறுவனம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் அமைந்துள்ள அனைத்து நலன்புரி நிலையங்களுக்கும் இவ்வருடம் பெப்ரவரி மாதத்தில் இருந்து தொடர்ச்சியாக உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வருகிறது.

இவற்றில் அரிசி தவிர்ந்த ஏனைய அனைத்து உலர் உணவுப் பொருட்கள் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிறுவன நிவாரணப் பிரிவின் தகவலின் படி கடந்த மூன்று மாத காலப்பகுதியில் மட்டும் 11.4 மில்லியன் நிதி செலவிடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இதே வேளை வவுனியா செட்டிக்குளம் நலன்புரி நிலையத்தில் தங்கியிருக்கும் 6ஆயிரத்து 500 இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் விநியோகிக்கும் பணி புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காவலன் கண்மணிகள்

சிந்தனைக்கு சில
சிந்தித்துப் பாருங்கள்

- எங்கு போனாலும் சரி முழு மனதுடன் போ
  எதைச் செய்தாலும் சரி முழு மனதுடன் செய்.
- உழைக்கும் மனிதனுக்கு உறக்கமும் இனிமை.
- உழைப்பதில் மட்டும்தான் உண்மையான பெருமை இருக்கின்றது.
- உனது நண்பன் தவறு செய்தால் அவனை திருத்த முயலு ஒதுக்க முயலாதே.
- எல்லாம் வேடிக்கைதான் மற்றவருக்கு நடப்பது நமக்கு நடக்கும் வரை.
- மனிதர்கள் நேசமாக உள்ள இடத்தில் கண்ணீர்கூட இனிப்பாக இருக்கும்.

சாதனை

வறுமையின் சாதனை
அப்துல் கலாம்

விஞ்ஞானத்தின் சாதனை
இலக்கான செவ்வாய்

கல்வியின் சாதனை
கொண்டலீசா ரைஸ்

தமிழின் சாதனை
தொல்பொருள் மொழியால்

பெண்மையின் சாதனை
கல்பனா சாவ்லா

தமிழினத்தின் சாதனை
சிதறிய மனிதம்

மனிதத்தின் சாதனை
பராக் ஒபாமா

எம் நாட்டின் சாதனை
கூறமுடியுமா???????

ப. பலோமியற்
பா. திருக்குடும்ப கன்னியர் மடம்.

காத்திருப்பு

அன்னையே நான் காத்திருந்தேன் - உன்
பொன் மடியிற்காக
கல்வியே நான் காத்திருந்தேன் - உன்னைப்
பெறுவதற்காக
நண்பியே நான் காத்திருந்தேன் - உன்
அன்பிற்காக
காதலியே நான் காத்திருந்தேன் - உன்
காதல் பதிலுக்காக
காத்திருந்து காத்திருந்து என் காலமும் போய்விட்டது
நான் காத்திருந்த எதுவும் கிடைக்கவில்லை
எனக்காக காத்திருந்த கடவுளின்
பொன் மடிக்காகக் காத்திருக்கின்றேன்

செ. நிலக்சனா
[illegible] பங்கு

என் தாய் தந்தை

மலர் ஜொலிப்பது
செடியின் முயற்சி
நான் ஜொலிப்பது - என்
தந்தை தாயின் பயிற்சி...

மரம் வளர்வது
வேரில் உறுதியில்
நான் வளர்வது - என்
தந்தை தாயின் உதிரத்தில்
இன்று நான் வணங்கும்
தெய்வம் என் தாய் தந்தை...

மரத்தைத் தாங்குவது
வேர் என்றால்
என்னைத் தாங்கும் ஆணிவேர்
என் தந்தை தாய்

உ. கௌராசா சோபனா
அல்வாய் வடமேற்கு அல்வாய்,
திக்கம்.

பொன்மொழிகள்

- எவ்வளவு கல்வியும், செல்வமும் இருந்தாலும், அடக்கம் இல்லாவிடில், பண்படைவது இல்லை.
- அறிவு வழியில் செல்பவன் உலகம் முழுவதும் புகழ் பெறுவான். உணர்ச்சி வழியே செல்பவன் உலக மக்களால் இகழப்படுவான்.
- நம்பிக்கை இல்லாமல் செய்யும் முயற்சி அடிவாரம் இல்லாத கிணற்றை ஆழம் காண முயற்சி செய்வதற்கு ஒப்பாகும்.
- தன்னலம் கருதும் மனிதன் எங்கெல்லாம் வாய்ப்புக் கிடைக்கிறதோ அங்கெல்லாம் கொள்ளை அடிப்பான். அவனுக்குத் தன்னுடைய இனத்தவர் அல்லது பிற இனத்தவர் என்ற வேறுபாடு கிடையாது.
- சுயராஜ்யம் கோழைகளுக்கும், சோம்பேறிகளுக்கும் அல்ல; சிரித்துக் கொண்டே தூக்கு மேடையில் ஏறத் தயாராக இருப்பவர்களுக்கு தான்.
- உண்மையான நம்பிக்கை மட்டும் ஒருவனுக்கு இருக்குமானால், அந்த நம்பிக்கையை வைத்து மலைகளைக்கூட அசைத்து விடலாம்.
- பிறர் நம்மைப்பற்றி என்ன எண்ணுகிறார்கள் என்பதைவிட, இறுதியில் நாம் எந்த நிலையில் இருப்போம் என்பதே முக்கியம்.

டொ. பிரசாத், ஆனைக்கோட்டை.

திரைப்பட திறனாய்வு

மெய்மையின் விடியல்
ஒரு குறும்படத் திரைப்பட திறனாய்வு

சமூகத் தொடர்பு ஆணையம்.
யாழ் மறைமாவட்டம்

தூய பவுலின் மறை அறிவிப்புப் பணியின் 2000ஆம் ஆண்டின் நிறைவை ஒட்டி யாழ் மாவட்ட சமூகத் தொடர்பு ஆணையம் தயாரித்த ஒரு குறும்பட முயற்சியே ''மெய்மையின் விடியல்'' எனும் குறும்படம்.

தென்னிந்திய சினிமாவின் தாக்கம் கடல் கடந்து நாட்டுக்கு மேலாக வீசிக்கொண்டிருக்கிறது. படம் என்றால் இதுதான் என்றொரு சட்டகம் ஒவ்வொருவரின் ஆழ்மனதிலும் நன்கு பதிந்து விட்ட ஒன்று. அதுவும் இன்றைய நவீன திரைப்பட ஊடகத்தின் தொழிநுட்ப வலுவின் வளர்ச்சி அபரிமிதமானது. அதனால்தான் திரைப்படம் என்பது ஒரு மாயை உலகின் சிறிது நேர சஞ்சாரிப்பு என்றாலும், அதன் இயங்கு திறனும், உத்திகளும் வயது வரம்பின்றி எல்லோரையும் கட்டிப் போட்டிருக்கின்றது. அதே வழியிலே சென்று, கிறிஸ்தவ நற்செய்தி கருவூலங்களை மக்களிடத்தில் சேர்ப்பிக்க முனையும் ஓர் கன்னி முயற்சியே தூய பவுலின் பணியை மையப்படுத்தி தயாரிக்கப்பட்ட இக்குறும் படம்.

குறைந்த தொழில்நுட்ப மற்றும் நிபுணத்துவ வளங்களோடு உருவாக்கப்பட்ட ஓர் படைப்பு என்பதிலே இம் முயற்சி பாராட்டுக்குரியது. மொத்தமாக 52 நிமிடங்கள் திரையிடப்பட்டுள்ள இப்படைப்பு 4 பகுதியாக பிரிக்கப்பட்டு திரை விமர்சனம் முன்வைக்கப்படலாம். அவை : கதைக்கரு, உரையாடல், தொழில்நுட்பம், இசை.

மெய்மையின் ஒரு விடியல்

கதைக்கரு

பாந்த் திருச்சபையின் நடைமுறைப்பிரச்சனைகளுக்கு பவுலின் கடிதங்களில் தீர்வு காண விளைவதையே இங்கு கருவாக கொள்ளப்பட்டிருக்கின்றது. இக்கரு, மாதாபுரம் பங்கு சபை அட்டவிளைதம், சலாமித் தீவின் எலிமா பவுல் இடையேயான முரண்பாடு அருகியோக்கிய திருச்சபையின் விவாதம், பிலிக்ஸ் காமலின் குடும்பம் என்ற காட்சி வைப்பு முறைகளால் நகர்த்தப்பட்டுள்ளது.

இக்கதைக்கரு நகர்த்தலைப் பொறுத்தவரையில் சில ஒன்றுக்கொன்று தொடர்புகள் அறுந்த நிலையில் காணப்படுகிறது. மாதாபுர பங்கு சபைக்கூட்டம், அருகியோக்கிய திருச்சபையின் விவாதத்தோடு நெருங்கிய தொடர்பு இருந்தபோதும் இவ்விரு சம்பவங்களுக்குமிடையே எலிமா பவுல் முரண்பாடு வைக்கப்பட்டதால் சொல்ல வந்த கருத்து அழுத்தமாக வெளிவரவில்லை.

பவுலும் அவரது ஆட்களும் தோன்றுகின்ற கதைக்களம் எல்லா இடங்களிலும் ஒரே மாதிரி இருப்பது தவிர்க்கப்பட்டிருக்கலாம் குறிப்பிட்ட கதைக்களம் பற்றிய உரையாடல் வரும்போது அவை காட்சிப்படுத்தப்படவில்லை.

உரையாடல் பாத்திரம்

நாடகமோ திரைப்படமோ, உரையாடலே (Dialogue) அதன் உயிர்ப்பகுதி. இங்கு ஆண் பெண் உரைஞர்கள் மற்றும் பாத்திரங்களின் உரையாடல்கள் ஒரு சிலரைத் தவிர குறிப்பிடக்கூடிய வகையில் இல்லை. முகபாவம் உரையாடல்களில் இலகு தன்மை (Flexibility) என்பன போதுமாக இல்லாதிருக்கிறது. எலிமா, பவுல் இவர்களின் இயல்பான நடிப்புத் திறன் ரசிக்கத்தக்கது.

பங்குச்சபை விவாதத்தின் பின்னர், உரைஞர் தமது உரையாடலில் பேசிய ''இவர்களுக்கு ஒரு பவுலல்ல, ஓராயிரம் பவுல் வந்தாலும் இவர்களைத் திருத்த முடியாது'' போன்ற எதிர்மறையான வார்த்தைகளைத் தவிர்த்திருக்கலாம். உரைஞரின் இயல்புக்கு அது பொருந்தாதே.

தொழிநுட்பம்

திரைப்படம் ஒன்றின் வெற்றிக்கு பயன்படுத்தப்படும் தொழிநுட்பம் காத்திரமான பங்கு வகிக்கிறது. Shots களுடைய தொகுப்புத்தான் படம். இங்கு காட்சிகள் துண்டு துண்டாக வெட்டி வெட்டி எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சில இடங்களில் இடமிருந்து வலமாகவும் வலமிருந்து இடமாகவும் கமரா (Camera) நகர்த்தப்பட்டிருப்பது ஒரு படத்துக்குரிய தன்மையை இல்லாமல் செய்துவிட்டிருக்கிறது. சில இடங்களில் உரையாடலைக் கட்டுப்படுத்தும் போது கமரா பக்கவாட்டில் நிற்பது தவிர்க்கப்பட்டிருக்கலாம். டப்பிங் செய்யப்பட்ட வார்த்தைகளோடு வாய், மற்றும் கை அசைவுகள் சேர்ந்து வரவில்லை. பிற மொழியில் படத்தினை எடுத்து தொகுக்கப்பட்ட காட்சிகள் சரியாகப் பொருந்தவில்லை.

இசை

பொருத்தமான பாடல் வரிகளை கொண்ட பாடல்கள் இசையமைக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்த ஆற்றுகைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பாடல் மெட்டும், இசைக்கப்பட்ட பின்னணி இசைக்கருவியும் கவர்ச்சிகரமானதாக இல்லை. நிறைவுப் பாடலில் நடனத்துக்குரிய பின்னணி ஆரம்பத்திற்கு பொருத்தமில்லை. பின்னர் பொருத்தமாக உள்ளது.

முடிவாக

குறும்படம் ஒன்றின் இயல்புகள் நிறைந்து, இசை நாடகப் பாணியில் அமைந்த ஓர் ஆற்றுகையாக இம் 'மெய்மையின் விடியல்' விளங்குகிறது. என்றும் தூய பவுலின் ஆன்ம வாஞ்சையும் நடைமுறைச் சூழலுக்கு ஏற்ற பவுலின் போதனையும் இப்பவுல் ஆண்டில் மக்களைச் சென்றடையும் என்ற நம்பிக்கை இவ்வாற்றுகை தரிசிப்பு ஏற்படுகின்றது.

வளனாரப்பப்பா பதில்கள்... (2ம் பக்கத் தொடர்ச்சி)

7. கேள்வி :- வளனாரே பாதை திறக்குமா?

அருட்குமாரன், நல்லூர்.

பதில் :- நீர் திறந்தால் திறக்கும், திறக்காவிட்டால் திறக்காது (நீர் மோட்ச பாதையைத் தானே கேட்டீர்) ஓ ஏ9 பாதையா? அது மேலே இருக்கிறவனுக்குத்தான் தெரியுமுங்கோ.

8. கேள்வி :- பப்பா, ஒரு கடி ஜோக் சொல்லுவீங்களோ? இம்முறை நான் மடுவுக்குப் போகலாமா?

சுகந்தி கோப்பாய்

பதில் :- கட்டாயம் நீர் போகத்தான் வேண்டும். ஏனெனில் மடுக்கோவில் உம்மைத்தேடி வராதே! ஹி... ஹி... ஹி... ஹி...

9. கேள்வி :- வளனாரே! யாழ் மாவட்டப் பாடசாலை மாணவ மாணவியர் மன்னாரில் நடைபெற்ற, நடைபெற்றுக் கொண்டிருக்கும் மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளச் சென்றார்களே என்னாச்சு?

நாதன், யாழ்ப்பாணம்.

பதில் :- அவர்கள் பதக்கங்களை கிள்ளியெடுத்துவரச் சொல்ல, அள்ளி எடுத்துக் கொண்டு வந்து விட்டார்களல்லோ! பாராட்டுக்கள்! தேசிய மட்டத்திலும் இச் சாதனைகள் தொடர வாழ்த்துக்கள்.

10. கேள்வி :- பப்பா! முதல் நன்மை திருப்பலிக்கு தம் பிள்ளைகளோடு பெற்றோர் பிரசன்னமாக இருப்பது வலியுறுத்தப்படுகிறது. இது அவசியமா?

காமலின், பாசையூர்

பதில் :- முதல் நன்மை திருப்பலிக்கு மட்டுமல்ல, தமது பிள்ளையின் எந்தவொரு ஆன்மிக சடங்கு கொண்டாட்டங்களிலும் தாய் தந்தையர் உடனிருப்பது அவர்களின் பொறுப்புள்ள நிலையை காட்டுகிறது. ஆனால் இந் நிகழ்வுகளுக்கு தந்தையர், கணவர் இருந்தும் அனாதைகளாக விதவைகளாக சில பிள்ளைகளும் மனைவியரும் காணப்படுவது வேதனை.

எமது மறைமாவட்ட பங்குகளில் இருந்து சேகரிக்கப்பட்ட விசேட நிதி விபரம்

நத்தார் - 2008

01.	குளமங்கால	10,350.00
02.	சுண்டிக்குளி	20,990.00
03.	அடைக்கல அன்னை ஆலயம் யாழ்ப்பாணம்	30,400.00
04.	திருநெல்வேலி	1,300.00
05.	பாண்டியன்தாழ்வு	4,450.00
06	ஆனைக்கோட்டை	9,400.00
07.	பருத்தித்துறை	10,610.00
08.	ஊர்காவற்றுறை	1,900.00
09.	நல்லூர்	6,802.00
10.	கொழும்புத்துறை	1,073.00
11.	இளவாலை	1,500.00
12	பாசையூர்	8,000.00
13.	மானிப்பாய்	7,780.00
14.	நாவாந்துறை	7,800.00
15.	உரும்பிராய்	1,500.00
16.	சில்லாலை	4,850.00
17.	சக்கோட்டை	2,500.00

பரிசுத்தவாரம் - 2009

01.	கொழும்புத்துறை	4,754.00
02.	கரம்பொன்	1,300.00
03.	திருநெல்வேலி	4,050.00
04.	குருநகர்	20,000.00
05.	மரியன்னை பேராலயம்	27,200.00
06.	மானிப்பாய்	8,900.00
07.	அல்லைப்பிட்டி	422.00
08.	புங்குடுதீவு	3,850.00
09.	நாவாந்துறை	12,500.00
10.	பாண்டியன்தாழ்வு	10,760.00
11.	சாட்டி	300.00
12.	பண்டத்தரிப்பு	5,100.00
13.	கொய்யாத்தோட்டம்	7,200.00
14.	அடைக்கல அன்னை ஆலயம் யாழ்ப்பாணம்	13,200.00
15.	சுண்டிக்குளி	12,744.00
16.	பாசையூர்	18,909.00
17.	ஊர்காவற்றுறை	4,900.00
18.	பருத்தித்துறை	10,492.00
19.	நெடுந்தீவு	2,450.00
20.	ஆனைக்கோட்டை	13,000.00
21.	சில்லாலை	6,100.00
22.	நல்லூர்	8,000.00
23	சக்கோட்டை	3,100.00
24.	மணற்காடு	2,200.00
25.	இளவாலை	2,000.00

திருப்பாலத்துவசபை 2009

01.	நாரந்தனை	655.00
02.	திருநெல்வேலி	1,100.00
03.	மரியன்னை பேராலயம்	12,000.00
04.	ஆனைக்கோட்டை	6,315.00
05.	சாட்டி	500.00
06.	பாசையூர்	7,000.00
07.	ஊர்காவற்றுறை	1,700.00
08.	நல்லூர்	2,766.00
09.	கொழும்புத்துறை	1,700.00
10.	முகமாலை	1,480.00
11.	குருநகர்	6,500.00
12.	இளவாலை	5,500.00
13.	கரம்பொன்	1,170.00
14.	பருத்தித்துறை	6,500.00
15.	மண்டைதீவு	1,197.00
16.	சுண்டிக்குளி	4,842.00
17.	மாரீசன்கூடல்	2,913.00
18.	பண்டத்தரிப்பு	2,755.00
19.	பாண்டியன்தாழ்வு	1,842.00
20.	நாவாந்துறை	2,500.00
21.	உரும்பிராய்	1,500.00
22.	மானிப்பாய்	4,200.00
23.	சில்லாலை	2,400.00
24.	சக்கோட்டை	3,800.00
25.	மணற்காடு	1,100.00

சின்னமடு மாதா

யாத்திரைத்தல திருவிழா

27.07.2009 – கொடியேற்றம் மாலை 4.00 மணி
04.08.2009 – நற்கருணை விழா மாலை 3.30 மணி
05.08.2009 – திருவிழாத் திருப்பலி காலை 9.30 மணி

பஸ் பயண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. தங்கு வசதி உண்டு
சின்னமடு அன்னையின் அருள் பெற வரவேண்டுகின்றோம்

அருட்திரு யே.அ.அருள்தாசன்
பரிபாலகர்

வாசகர்களே!

குருக்களின் ஆண்டு பற்றிய ஆக்கங்களுக்கான ஒரு சிறப்புப் பகுதியை பாதுகாவலன் தாங்கி வருகின்றது. இப்பகுதியில் இடம் பெறுவதற்கு தகுதியான கட்டுரைகள், கவிதைகள் மற்றும் உங்கள் ஆக்கங்களை அனுப்பி வையுங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்.

யாழ் ஆயரின் வேண்டுகோள்

ஆவணி மாதம் 2009 ஆண்டு பங்குகளில் ஞாயிறு திருப்பலியின் போது திருமண அருட்சாதனம் பற்றிய சிறப்பான மறையுரை ஆற்றும்படி குருக்களைக் கேட்டுக் கொண்டார்.

1ம் வருட நினைவஞ்சலி

திருமதி மேரி திரேசா
ஜோசபினா விமலதாசன்
(ஓய்வுநிலை உப அதிபர்
யாழ் கன்னியர் மடம் மகா வித்தியாலயம்)

மண்ணில் 1942.04.23
விண்ணில் 2008.07.16

''வாழ்ந்தாலும் இறந்தாலும் ஆண்டவருக்கே உரியவர்கள்''

ஆறுதலில்லை எம் மனது அறியாத உங்கள்
நினைவுகளால் தேசமொரு பக்கமாய் நாம்
வாழ்ந்தாலும் தூர தேசமெல்லாம் உங்கள்
உறவுகள் சிதறுண்டு கிடந்தாலும் எப்போதும்
உங்கள் நினைவால் வாடுகின்றோம்.

அஞ்சலா யேசுதாசன்
102, மவுண் கார்மல் வீதி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்,
சகோதரன், சகோதரிகள்.

(Advt 53/09)

31ம் நாள் நினைவஞ்சலி

K.J. நிரோஜன்

மண்ணில் : 10.09.1984
விண்ணில் : 21.06.2009

எம் இனியவனே இறைவனே
இவ்வட்டமாய் நீயும் சிறகடித்துப் பறக்கவோ
எத்தனையோ கனவுகள் எத்தனையோ எண்ணங்கள்
அத்தனையும் தீனாய் அடிசாய்ந்து விட்டதுவோ

அற்பர்களின் சதிவலையில் - நீயும்
அநியாயமாய் அகப்பட்டாய்
தோழுக்காய் உயிர் கொடுத்தாய்
சொந்தங்களை விட்டொழிந்தாய்

பாதை நிறைந்துடன் புந்து வருவாய் என
நாமும் பார்த்த விழி மூடவில்லை
காலவன் உன்னைக் கவர்ந்துதான் சென்றானோ
பொறுக்கவில்லை நெஞ்சம் பொருமி அழுகின்றோம்

எமது மைந்தனின் அதிர்ச்சித் தகவலைக் கேட்டவுடன் உடனடியாக வந்து உதவிக்கரம் நீட்டியவர்களுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும், மலர் வளையங்கள் செலுத்தியவர்களுக்கும், இறுதிச் சடங்கில் பங்கு பற்றியவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

100, கோம்பயன் வீதி,
யாழ்ப்பாணம்.

(Advt 55/09)

பிரிவால் துயருறும்
அம்மா, அப்பா, அக்கா, தம்பி
அன்பு நெஞ்சங்கள்.

பிலிப்பைன்ஸ் தேவாலயத்தில் குண்டு வெடிப்பு: 5 பேர் பலி

பிலிப்பைன்ஸ் நாட்டின் தேவாலயத்துக்கு அருகில் சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் ஒரு பெண் உட்பட ஐந்து பேர் பலியாயினர்; 45 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் றோமன் கத்தோலிக்கர்கள் அதிகம் உள்ளனர். மின்டானாவ் என்ற பகுதியில் முஸ்லிம்கள் அதிகம் வசிக்கின்றனர். இந்த பகுதிக்கு தன்னாட்சி அதிகாரம் கோரி சிலரும், தனிநாடு கோரி மோரோ இஸ்லாமிக் விடுதலை முன்னணி பயங்கர வாதிகளும் போராடி வருகின்றனர். இந்நிலையில், கோட்டாபாட்டோ என்ற இடத்தில் உள்ள தேவாலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிரார்த்தனை நடந்து கொண்டிருந்தது. தேவாலயத்தின் வெளியே உள்ள கடையில் வைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த குண்டு, அந்த வழியாக ராணுவ வாகனம் செல்லும் நேரத்தில் வெடிக்க செய்யப்பட்டது.

இந்த குண்டு வெடிப்பில் இறைச்சி விற்றுக் கொண்டிருந்த பெண், மூன்று வயது சிறுவன் மற்றும் ராணுவ வீரர் உட்பட ஐந்து பேர் உடல் சிதறி பலியாயினர்; 45 பேர் படுகாயமடைந்தனர். தேவாலயத்தின் ஒருபகுதியும் சேதமடைந்தது. குண்டு வெடித்ததால் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தவர்கள் அலறியடித்து நாலாபுறமும் ஓடினர். இச்சம்பவத்துக்கு மோரோ இஸ்லாமிக் விடுதலை முன்னணியினர் தான் காரணம் என ராணுவத்தினர் சந்தேகிக்கின்றனர்.

வத்திக்கானில் திருத்தந்தையை தரிசித்தார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வத்திக்கான் நகரில் வெள்ளிக்கிழமை பாப்பரசர் 16ஆம் பெனடிக்ற் அடிகளைச் சந்தித்தார்.

இச்சந்திப்பில் இருவரும் ஒவ்வொரு நாட்டின் எதிர்காலத்திற்கும் சவாலாக உள்ள பாதுகாப்பு, மக்களின் வாழ்க்கைத் தரம் ஆகியவை உட்பட பல்வேறு விடங்கள் குறித்து பேசினர்.

அப்போது திருத்தந்தையிடம் அமெரிக்காவின் கருக்கலைப்பு எண்ணிக்கையைக் குறைப்பதற்கு தான் தனிப்பட்ட முறையில் முயற்சி எடுக்கவுள்ளார் என ஒபாமா உறுதியளித்தார்.

கருக்கலைப்பு மற்றும் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை கத்தோலிக்கத் திருச்சபை எதிர்த்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இனப்பெருக்கத்தில் தொழில் நுட்பம் குறித்த தகவல்கள் அடங்கிய பிரதியை ஜனாதிபதி ஒபாமாவுக்கு பாப்பரசர் அளித்தார். ''தனிமனித மேன்மை" என தலைப்பிடப்பட்ட அந்த ஆவணம் உயிரியல் தொழில் நுட்பங்களில் சிலவற்றை முறையற்றவை என பட்டியலிடுகிறது.

குட்டிக்கதை

பையனும்(வேலிப்) பலகையும்

அருட்பணி டேவிற், நியூயோர்க்

கடுமையாக கோபமுறும் இயல்பைக் கொண்ட பையன் ஒருவன் வாழ்ந்து வந்தான் அவருடைய தந்தை அவனுக்கு ஒரு பை நிறைய ஆணியைக் கொடுத்து அவன் கடுங்கோபம் கொள்ளும் போதெல்லாம் ஒவ்வொரு ஆணியை எடுத்து பலகையில் அடிக்கும்படி கூறினார்.

முதலாவது நாளில் மட்டும் அப்பையன் 37 ஆணிகளை அந்தப் பலகையில் அடித்தான். ஆனால் அடுத்த சில வாரங்களில் அவன் தனது கோபத்தை அடக்கக்கற்றுக் கொண்டான். அவ்விதம் அவன் அடிக்கும் ஆணிகளின் தொகையும் குறைந்து கொண்டே வந்தது. பலகையில் ஆணியை அடிப்பதிலும் பார்க்க கோபத்தை அடக்கவது இலகுவானது என அவன் உணர்ந்து கொண்டான். இறுதியாக அவன் அறவே கோபம் கொள்ளாத நாள் வந்தது. அவன் இதை தந்தையிடம் கூறிய போது தந்தை அவனிடம் அவன் கோபத்தை அடக்கக்கற்றுக் கொண்டமையைக் காட்ட ஒவ்வொரு நாளும் ஒவ்வோரு ஆணியாக பலகையில் இருந்து அகற்றும்படி கூறினார். நாட்கள் கழிந்தன. பையனும் தான் அடித்த ஆணிகளையும் அகற்றி விட்டதாகவும் தந்தையிடம் கூறினார்.

தந்தை அவனைக் கையில் பிடித்து அந்தப் பலகை இருக்குமிடம் அழைத்துச் சென்றார். அவர் அவனைப் பலகையில் உள்ள துவாரங்களை நன்றாகப் பார்க்கும்படி கூறினார். அந்தப் பலகை திரும்பவும் பழைய நிலைக்குத் திரும்பாது அதேபோல் நீ கோபத்தின் போது ஏதும் கூறினால் அதுவும் சில வடுக்களை ஏற்படுத்தும். நீ ஒரு மனிதனுக்கு கத்தியால் குத்தி அந்தக் கத்தியை மீளவும் எடுக்கலாம். நீ எத்தன்ன தடவை மன்னிப்பு கோரினாலும் அந்த அடையாளம் அப்படியே இருக்கும். வார்த்தையினால் ஒருவருக்கு ஏற்படுத்தும் காயம் உடலில் ஏற்படுத்தும் காயத்துக்கு சமனானது.

கத்தோலிக்க திருமறைத் தேர்வு முடிவுகள்

11.10.2008 அன்று யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலையத்தால் பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பட்ட கத்தோலிக்க திருமறைத்தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலை மாணவ, மாணவியரின் விபரங்கள்

பாடசாலையின் பெயர்	தரம்	மாணவரின் பெயர்	நிலை /இடம்	புள்ளி
யாழ். சில்லாலை றோ.க.த.க பாடசாலை	03	நி.ம. ஜெனவ் சனோஜன்	1ம் இடம்	97
யாழ். கரம்பொன் சிறியபுஷ்பம் மகளிர் ம.வி.	03	ம.சயன்சி	2ம் இடம்	96
யாழ். புனித டொன்பொஸ்கோ வித்தி	03	அ.மாறியோ டில்ஷான்	3ம் இடம்	95
யாழ். சுண்ணாகம் றோ.க.த.க பாடசாலை	04	இ.அனிஸ் புளோறிடா	1ம் இடம்	97
யாழ். மாரீசன்கூடல் றோ.க.த.க பாடசாலை	04	த.அஜித்	2ம் இடம்	95
யாழ். சென் ஜோசவ் வித்தியாலயம்	04	றொ. மதுஷன்	3ம் இடம்	94
யாழ். பெனடிற் றோ.க.த.க பாடசாலை	05	த. மரியதர்ஷன்	1ம் இடம்	99
யாழ். துரையப்பா வித்தியாலயம்	05	அ.நிஷாலினி	2ம் இடம்	96
யாழ். கரம்பொன் சிறியபுஷ்பம் மகளிர் ம.வி.	05	யூ. மேரி அனிஸ்ரலா	3ம் இடம்	94
யாழ். மத்திய கல்லூரி	06	ஜெ. கிளாறின்	1ம் இடம்	99
யாழ். இளவாலைக் கன்னியர் மடம் ம.வி.	06	அ. மேரி பிரியதர்சினி	2ம் இடம்	98
யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் பாட.	06	வி. ஆன் யுடிற்றா	3ம் இடம்	97
யாழ். சென் ஜேம்ஸ் மகளிர் பாடசாலை	06	யூ. தனுஜா	3ம் இடம்	97
யாழ். வேம்படி மகளிர் கல்லூரி	07	நிக்கலின் ஸ்ரனிஷா அன்ரன்	1ம் இடம்	100
யாழ். வேம்படி மகளிர் கல்லூரி	07	றிச்சாறியஸ் றெக்ஸ் எழன்	2ம் இடம்	98
யாழ். வேம்படி மகளிர் கல்லூரி	07	விசிற்றேஸன் லெஸ்ராமியர்சன்	3ம் இடம்	97
யாழ். சில்லாலை றோ.க.த.க பாடசாலை	08	அ. மேரி மெல்சியா	1ம் இடம்	95
யாழ். கரம்பொன் சிறியபுஷ்பம் மகளிர் ம.வி.	08	சி. மேரி டனுசா	2ம் இடம்	94
யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் பாட.	08	அ. ஜெனனி டிலக்ஷா	3ம் இடம்	92
யாழ். வேம்படி மகளிர் கல்லூரி	09	அ. ஆன் அபிநயா	1ம் இடம்	95
யாழ். வேம்படி மகளிர் கல்லூரி	09	டொ. அ. ஜெரின்ஷியா	2ம் இடம்	93
யாழ். கரம்பொன் சிறியபுஷ்பம் மகளிர் ம.வி.	09	ய. மேரி பார்பரா சுகினா	3ம் இடம்	92
யாழ். இளவாலைக் கன்னியர் மடம் ம.வி.	10	கெ. ஆன்டொலினா	1ம் இடம்	94
யாழ். பரு. சென் தோமஸ் றோ.க.பெ. பாட	10	அ. அமல்றொசன்ரா	2ம் இடம்	93
யாழ். வேம்படி மகளிர் கல்லூரி	10	யோ. சாந்தமரீன் மேரி	3ம் இடம்	92
யாழ். வேம்படி மகளிர் கல்லூரி	11	இ. ஏஞ்சல் றுக்ஷனா	1ம் இடம்	99
யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் பாட.	11	றோ. மேரி மயூறி	2ம் இடம்	97
யாழ். வேம்படி மகளிர் கல்லூரி	11	ம. யூழன் டிலோஷனா	3ம் இடம்	96
யாழ். கரம்பொன் சிறியபுஷ்பம் மகளிர் ம.வி.	11	ஞா. யூடிற் சயானா	3ம் இடம்	96

அருட்சகோதரி அன்சில்லா ஜேம்ஸ் இறைபதம்

நாரந்தனை ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகக் கொண்ட திருக்குடும்ப கன்னியர் சபைச் சேர்ந்த அருட்சகோதரி அன்சில்லா ஜேம்ஸ் இறைபதமடைந்தார். இவர் 2001ம் ஆண்டு தொடக்கம் 6 வருடங்கள் யாழ் மாகாணத் தலைவியாக பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.

இவரின் ஆன்மா இறைவனின் சந்நிதியில் இளைப்பாற இவருக்காக பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் செபங்களை காணிக்கையாக்குகின்றோம்.

அகதி முகாம் மக்களுடன் மன்னார் ஆயர் சந்திப்பு

மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை வவுனியா மற்றும் செட்டிகுளம் ஆகிய இடங்களில் உள்ள நலன்புரி நிலயங்களில் தங்கியுள்ள மக்களைச் சந்தித்து வருகின்றார்.

அந்த நலன்புரி நிலயங்களில் திருப்பலி ஒப்புக்கொடுத்து, அங்குள்ள மக்களின் குறை நிறைகளை விசாரித்து அவர்களின் பல்வேறு அடிப்படைத் தேவைகளையும் நிறைவேற்ற முயற்சித்து வருகிறார்.

அத்துடன் மன்னார் மறைமாவட்டக் குருக்களும் யாழ். மறைமாவட்டக் குருக்களும் ஞாயிறு மற்றும் ஏனைய தினங்களில் இந்த நலன்புரி நிலையங்களுக்குச் சென்று திருப்பலி ஒப்புக்கொடுத்து வருகின்றனர்.

திருத்தந்தை அருட்பணியாளருக்கு... (5ம் பக்கத் தொடர்ச்சி)

துடன், தமிழ் சமூகம் இன்றுவரை ஆன்மீகப் பற்றிலும், கல்வி வளர்ச்சியிலும், விளையாட்டுத்துறையிலும் கலை நிகழ்வுகளிலும், தலை சிறந்தவர்களாக விளங்க பல அருட்பணியாளர்கள், துறவிகள், அருட்சகோதரிகள் ஆற்றிய ஒப்பற்ற பணிகளுக்காக அவர்கள் முன்பாக எழுந்து நின்று அவர்களின் தன்னலமற்ற சேவைகளை பாராட்டுகின்றது. குறிப்பாக கடந்த 30 வருட போர் காலத்தில் அவர்கள் தியாகத்துடன் ஆற்றிய சேவைகள் தான் எத்தனை எத்தனை! பல அருட்பணியாளர்கள் தமது உயிரையும் உடலையுமே மக்களுக்காக அர்ப்பணித்துள்ளனர். சில பணியாளர்கள் எங்குள்ளார்களோ என அறியாவண்ணம் மறைக்கப்பட்டுள்ளனர். சிலர் அவயங்களை இழந்து தவிக்கின்றனர், எனவே அருட்பணியாளர்களுக்காக விசேடமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இந்த ஒரு வருட காலத்தில் அவர்களின் விடுவிற்பிற்காகவும் அவர்கள் துன்பங்களிலிருந்து மீண்டும் தமது பணித்தளங்களில் தொடர்ந்து அன்புப் பணியாற்ற நாம் அனைவரும் எம்மால் இயன்ற உதவிகளை வழங்க வேண்டும். அத்தோடு நின்றுவிடாது அனைத்து அருட்பணியாளர்களின் பாதுகாப்பிற்கும் நாம் உறுதியுடன் குரல் கொடுப்பதோடு அவர்களுக்காக இறைவனிடம் இறைஞ்சுவதும் இன்றைய தேவையாக உள்ளது!

கமிலஸ் துரைசிங்கம்,
ஒபகௌசன், யேர்மனி

புகழோங்கும் யாழ் ஆயர் சீறோங்க வாழ்த்துப்பா 2009

ஈழமணித் திருநாட்டின் இலங்கு புகழ் – தலையாம்
ஈசனவன் உவந்தளித்த யாழினிய நகராம்
மாசு நீங்கி மண்ணுதித்த அறங்காவலூராம்
அங்குதித்தார் பொங்கு புகழ் ஆயர் பெருமானாம்

கல்வியும் ஒழுக்கமும் கவின் கலையும் – மிகவே
ஆரம்பக் கல்விதனை காவலூரில் பெற்று
இன்பமாய் இடைநிலையை கழித்திடவே வந்தார்
பத்திரிசியார் சமூகமதில் பாங்குடனே நுழைந்தார்

பார் போற்றும் குருவாக ஆகிடவே விழைந்த
பாசமிகு அழைப்பதனை ஏற்றுப் பணிவாழ்வில்
வீச்சுடனே நுழைந்திட்ட நேசமிகு மகனும்
மூச்சுடனே உழைத்திட்டார் இயேசு பரனுக்காக

தோமஸ்| எனும் திருநாமம் தோதாகப் பொருந்த
தோழனாய், தந்தையாய் தோன்றிய நடம் புரிந்தார்
மன்னார் பதியதனில் மாண்புடனே உயர்ந்தார்
ஆயர் எனும் இனிய வழி நடத்திலே எழுந்தார்

கதிரவன் தன் பொற்கதிர்கள் வீசி வருவது போல்
யாழ் மண்ணும் நலம்பெறவே தன் கதிரை வீசி
ஆழ் கலியும் நீங்கிடவே பாடுபட்டுழைத்தார்
வாழ்க அவர் நாமம் வாழிய வாழியவே

ஏழ் நான்கு ஆண்டுகளாய் ஆயர் பணியாற்றி
ஏழ புகழ் புவி மீது நிலையெனவே கொண்டு
வாழும் நல்லாயன் நிலை வாழ்வு பெறவே
பெயர் கொண்ட நாளில் போற்றிடுவோம் நாமே

யாழ் நாட்டின் கல்வியிலே கலங்கரை விளக்காய்
கல்லூரிச் சமூகமதும் தங்கள் பணிகண்டு
வாழ்த்தி வணங்குவது இறையாசிக்காக இயேசுபரன்
அருள் என்றும் உம்மில் நிலை பெறவே

கிறிஸ்தவ மாணவர் மன்றம்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியயற் கல்லூரி.

வாசகர் கருத்து : மரபணு மாறினாலன்றி...

அருட்பணி. அலைச்சாண்டர் S.S.S அவர்கள் 07.06.2009 பாதுகாவலனில் வெளியிட்டிருந்த ''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்னும் கருத்துருவை மிகுந்த ஆர்வத்தோடு படித்தேன். தமிழ் பேசும் அரசியல் தலைவர்கள் ஒன்று சேர்ந்து செயற்படும் சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்துள்ளது என்று அதில் அவர் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். தகுந்த சமயத்தில் தகுந்த யோசனையே. (சந்தர்ப்பத்தோடு நிர்ப்பந்தமும் என்று சொல்லலாம்)

ஆனால், தமிழ் பேசும் மக்கள் எல்லோரும் ஒன்றுபட்டாலும் தமிழ் பேசும் அரசியல் தலைவர்கள் ஒன்றுபடுவார்களா? இது முற்காலத்தில் இந்தியாவில் தமிழைத் தாய் மொழியாகவும் மூலமொழியாகவும் கொண்டவர்கள். தம்முள் சேர, சோழ பாண்டியர் என்று பிளவுபட்டு தமிழ் பேசும் இனத்தின் பலத்தையும் பெருமையையும் அழித்த மரபணு என்ற ஒன்று இருக்கின்றது. அதை மாற்ற வேண்டுமே!

தற்போதைய தமிழ் நாட்டையே பார்ப்போம். தமிழைப் பற்றி எல்லோரும் எப்படியோ பேசினாலும் தம்முள் அவர்கள் எப்படிப் பிளவு பட்டு அடிபடுகிறார்கள்! ஒன்று படுவதற்கு மரபணுவிடாது. இந்த மரபணவை மாற்றமுடியுமா? மாற்றுவோமா?

அருள், கொழும்பு 13

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2009 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.